499

**மு. கருணாநிதி**

முரசு 1 | சென்னை | 25—2—55 | வெள்ளி | ஒலி 48

# கோவையில் பொதுக்குழு!



ஆலோசனைக் கூடத்தில் அண்ணாவும், தம்பிகளும்!




கொங்குச் சீமையில் எங்கள் பட்டாளம்!

Best copy available

# இணைந்து வாழ்வோம்! இலட்சியம் சாகாது!

திரு. ராம்மனோகர் லோஹியா அவர்களுக்கு; வணக்கம். கல்கியாரின் அருமை பெருமைகளைக் குறிப்பிட்டு அவர் இயற்கை யெய்துவதற்கு முன்பாக நீங்கள் அவருக்கு எழுதிய கடிதத்தை, உங்கள் சார்புள்ள இதழில் கண்டேன். அந்தக் கடிதத்தில், தென்னாட்டில் நிலவிவரும் பிரச்சினைகளையெல்லாம் தொட்டுத் தொட்டு விட்டிருக்கிறீர்கள். கல்கியாரை புகழ்வதிலே தொடங்கி, பாாப்பனர், பார்ப்பனரல்லாதார், தகராறோடு தங்களின் கடிதம் முற்றுபெற்றிருக்கிறது.

அன்புள்ளவரே, என் உள்ளத்தில் பட்டதை வெளிப்படையாகச் சொன்னால் நீங்கள் வருத்தப்பட மாட்டீர்களென்றே நான் கருதுகிறேன்; ஒரு வேளை நீங்கள் தவறாக நினைத்தாலும் எனக்குக் கவலையில்லை. கல்கியாரை நீங்கள் தவறாகவே புரிந்துகொண்டிருக்கிறீர்கள். கல்கி கிருஷ்ணமூர்த்தி அய்யர் முழுக்க முழுக்க உங்கள் கட்சியை ஆதரித்துவிடுவார் என்றெல்லாம் நீவிர் எண்ணியதுண்டு; கடைசி வரைகூட அந்த எண்ணம் உங்களைப் போன்றாரின் இதயங்களிலே ஜீவித்திருந்தது; அது ஒன்றும் தவறில்லை. கல்கியாரின் போக்கும் கொஞ்சநாளாக அப்படித்தான் இருந்தது. தானுப்பிள்ளைக்கு விருந்து நடத்துவதும், தனது இதழிலே அடிக்கொருமுறை 'சோஷலிசத்'தை மலரச் செய்வதுமாகத்தானிருந்தார். ஆனால் கல்கியார் பிரஜா சோஷலிஸ்ட் இயக்கத்திலே உறுதியான பற்றுதலைக் கொண்டிருந்தாரா என்று நீங்கள் சோதித்துப் பார்க்கவில்லை — எடை போடத் தவறிவிட்டீர்கள். ஒரு காலத்திலே கல்கியின் மனதிலே சபலம் தட்டியதுண்டு; காங்கிரசின் வாரீசாக பிரஜா சோஷலிஸ்ட்டுக் கட்சி வரலாம்; அதற்கு இப்போது முதற்கொண்டே வேலை செய்தால்தான் தென்னாட்டில் ஒரு நிலையான ஸ்தானத்தை-தலைமையை தம்மால் பிடிக்கமுடியும் என்று கல்கியார் எண்ணியதை தமிழ்நாட்டு அரசியலில் உள்ளோர் அனைவரும் அறிவர். பி. சோ. கட்சி வெறும் பித்தலாட்டக்காரர்கள் முகாம் என்று வசை புராணம் கொடுத்தவர்கள்கூட அந்த நேரத்தில் கல்கியாரிடம் 'முகஸ்துதி' பாடியதை நானறிவேன். ஆனால், அதே நேரத்தில், கல்கியார் நேரடியாகவும் பி. சோ. கட்சியில் குதித்துவிட முடியாத நிலையில் இருந்தார். ஒரு பக்கம் ஆச்சாரியார், மறுபக்கம் நேரு; இவர்களுக்காகவாவது காங்கிரசைக் கைகழுவாமல் இருக்கவேண்டியிருந்தது.

தமிழ் நாட்டுக்கு விருந்தினராக வந்த நேரத்திலே மட்டும் கல்கியாரோடு நீங்கள் பழகியிருப்பதால் இந்த 'நளின'ங்களெல்லாம் உங்களுக்குப்பிடிபட்டிருக்காது. அவர் தம்இல்லத்தில்தந்தஇன்னமுதும், பி. சோ. கட்சி பற்றிய இரண்டொரு தலையங்கமும் அவரை 'வெண்சங்கா'க எண்ணும்படி செய்துவிட்டன. நான் நிச்சயமாகச் சொல்வேன்; கல்கி கிருஷ்ணமூர்த்தியார் குறிப்பிட்ட ஒரு வரம்பிலே நின்று பேசியதில்லை; எழுதியதில்லை. ஏதாவது ஒரு அதிகாரப்பூர்வமான இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு, அதன் ஒழுங்கு மீறாமலும் நடந்தது கிடையாது. ஒரே ஒரு உதாரணம்; நீங்கள் எந்தக் காங்கிரசை வன்மையாகக் கண்டிக்கிறீர்களோ, அந்தக் காங்கிரஸ், எதேச்சாதிகார தோரணையிலே கொண்டுவந்த கல்வித் திட்டத்தை ஆதரித்த 'பிற்போக்கு' மனோபாவம் கொண்ட பத்திரிகைகளிலே முதன்மையானது கல்கி. அப்பேர்ப்பட்ட 'புண்ணியவானு'க்குத்தான் நீங்கள் உள்ளம் விட்டு கடிதம் எழுதியிருக்கிறீர்கள்.

கடிதத்தில் அடுத்தபடியாக பொதுவுடமை பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். **"இந்தியாவின் தென்பகுதியில் ஒரு விசித்திரமான கம்யூனிச எதிர்ப்பு மனப்பான்மையினால் செயலில் ஈடுபடும் திறமையை மக்கள் இழந்து விடுகின்றனர். பீதியினால் ஏற்பட்டு வளர்ந்துவரும் கம்யூனிச எதிர்ப்பு மிகவும் அபாயகரமானது"**—இவை கடிதத்தில் காணப்படும் தங்களின் வாசகங்கள். தென்னாட்டுமக்கள் கம்யூனிசத்தை எதிர்ப்பதாக நீங்கள் தவறாகபுரிந்துகொண்டிருக்கிறீர்கள்—அல்லது யாராவது தங்களிடம் தவறாகச் சொல்லியிருக்கவேண்டும். நீங்கள் கருதுகிறபடி தென்னாட்டுமக்கள் பொதுவுடமையை எதிர்ப்பதாகவே இருந்தாலும், அதற்குக் காரணம் மக்களல்ல; 'பொதுவுடைமைவாதி'களென்று தங்களைத்தானே அழைத்துக் கொள்ளும் ஒரு சில 'தீனதயாளர்'கள் அவரவர்களின் தினசரி நடவடிக்கைகளின் மூலமே பொதுவுடமைக் கொள்கையை மக்கள் மன்றத்திலே 'அனாதை'யாக்கி விட்டார்கள். அதற்குயார் பொறுப்பாளி? பொதுமக்களா? அல்லது போலிவேடதாரிகளா? மணமலர் தருகின்ற ரோஜா செடியிலே முள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் பொதுவுடமையை மலர்விக்க எண்ணிய தென்னாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி, அந்த முள்ளை-ரோஜா செடி முள்ளை விஷக் கத்தியாகக் காட்டிக்கொண்டு அல்லவா மங்கையர் தன்னை அணுகாமல் கெடுத்துக் கொண்டது. **'விசித்திரமான எதிர்ப்பு'** என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பது தவறுதான்—மக்களின் மனவளம் உணராமல் — அரசியலில், இன அடிப்படையில் எழுந்துள்ள உரிமைக்குரல்களைக் கவனியாமல் போதனை புரியகிளப்பியுள்ளவர்களுக்கு தென்னாடு புகட்டிய பாடம் என்றுதான் நீங்கள் இதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். விசித்திர எதிர்ப்புமல்ல! இதிலே வேதனைப் படுவதற்கும் ஒன்றுமில்லை!

தென்னாட்டில் சோஷலிஸ்ட் கட்சி வலுப்பெற வேண்டுமென்ற ஆசையும் உங்கள் உள்ளத்திலே சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது! அந்த ஆசை, கடிதத்திலே எதிரொலிப்பதை நான் அறிகிறேன். ஒன்றுமட்டும் நிச்சயம்; தென்னாட்டைப் பொருத்தவரை இங்கு வளர்ந்துள்ள திராவிட இனவிடுதலை இயக்கத்தைச் சார்ந்துள்ள மக்கள் சக்தியை எதிர்த்துக் கொண்டால் எந்த அரசியல் இயக்கமாக இருந்தாலும் வெற்றிபெற முடியாது! வெற்றி பெறவே முடியாது! இதுவரை யாரும் வெற்றி பெற்றதும் இல்லை! அதுவும் சமுதாயத்தையும், பொருளாதாரத்தையும், அரசியலையும் இணைத்து தன்னுடைய இலட்சியமாகக் கொண்டிருக்கிற ஒரு பெரும் படையினரிடம், அரசியலை மட்டுமோ, அல்லது பொருளாதாரத்தை மட்டுமோ தங்களது குறிக்கோளாக வைத்திருக்கும் சோஷலிஸ்ட் கட்சி தென்னாட்டில் இயங்குவதும்—அந்த இயக்கத்திற்கு ஆள் கிடைப்பதும் கஷ்டம்தான் — மிகமிகக் கஷ்டம்தான்!

பொதுத் தேர்தலிலே ராஜாசர் முத்தையா செட்டியார் நிற்கிறார்; அவருக்கு எதிராக காங்கிரஸ் அபேட்சகரை நிறுத்தமாட்டார்கள் என்று தெரிந்தும் இரண்டுதொகுதிகளுக்கு அபேட்ஷாபத்திரத்தை தாக்கல் செய்து ஆலமரத்துப் பெட்டியை மக்களிடம் காட்டிவிட்டு பின் ஏனோ—எந்த உடன் படிக்கையின் பேரிலோ - செட்டியாரின் தொகுதியை மாற்றிக் கொண்டு செட்டியாருக்கு விட்டுக்கொடுத்துவிட்டு ஆலமரத்தை வேறு தொகுதிக்கு வேரோடு பெயர்த்துக் கொண்டு போனவர்கள் சோஷலிஸ்டு கட்சியிலே உள்ளவரை தென்னாட்டில் சோஷலிஸ்ட் கட்சி நித்த நித்தம் செத்துக் கொண்டுதானிருக்கும். சோஷலிஸ்ட் இயக்கத்திற்கு தென்புலத்தில் ஒரு லோகியோ கிடைக்கமாட்டார். அந்த லோகியோக்கள் எல்லாம் இன உரிமைக் குரல் எழுப்பும் அறிவியக்கத்தில் ஊறிப் போயிருக்கிறார்கள்.

கடிதத்தின் முடிவுரையாக 'தென்னாட்டில் பார்ப்பனீயம் போகவேண்டும், பார்ப்பனரல்லாதாரீயமும் போகவேண்டும்' என்று தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்கள். "பார்ப்பனீயம் ஒழிய வேண்டும்"—இந்த நல்லெண்ணத்திற்கு தலை வணங்குகிறேன். அடுத்தபடியாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே பார்ப்பனரல்லாதாரீயமும் ஒழியவேண்டும்' என்று. அந்தப் பார்ப்பனரல்லாதாரீயம் தானாக உண்டான

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

## "தென்றல் திரை"

தோழர் வைரவன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "தென்றல்" நிலையத்திலிருந்து வெளியிடப்படும் "தென்றல் திரை" யெனும் திங்கள் ஏடு வரப்பெற்றோம். கலைத்துறைக்காகப் பணியாற்றும் நன்னோக்கோடு புதிய புதிய அம்சங்களைப் பெற்று திரையுலகக் காட்சிப் படங்களுடன் "தென்றல் திரை" மிளிர்கிறது. கவிஞர் கண்ணதாசன் அவர்களது "எங்கள் தொழில் கேளாய் இளங்கொடியே" என்ற கட்டுரையும் தோழர்கள் வில்வம், க. நாராயணன் தென்னரசு ஆகியோரது கட்டுரைகளும் "தென்றல் திரை" க்குச் சிறப்பளிக்கின்றன. ஆனால் **"திருஆரூரான்"** என்ற பெயரில் எழுதியிருக்கும் தோழர் எதிர் முகாம்களுக்கு பதிலளிக்கும் கட்டுரையில் "கார" மான வார்த்தைகளை கையாண்டிருக்கிறார். மென்மைமிகுந்த "தென்றல் திரை"க்கு இது ஒருகுறைதவிர வேறெந்தக் குறையுமில்லை. அடுத்து வரும் இதழ்களில் இக்குறை நீக்கப்படும் என்று நம்புகிறோம். கலைத்துறையில் ஆர்வமுள்ளோர் அனைவரும் ஆதரிக்க வேண்டிய ஏடு "தென்றல் திரை". "தென்றல்" நிலையத்தாரின் முயற்சிக்கு நமது பாராட்டுகள்.

கிடைக்குமிடம்:
2-127, மவுண்ட் ரோடு, சென்னை 6.
விலை அணா நான்கு.

# தலையங்கம்

சென்னை 25—2—55 வெள்ளி

## நாடகம் நடிக்கிறார்கள் !

“காங்கிரஸ் அக்கிராசனரான ஸ்ரீ யு. என். தேபர் நேற்று நல்பாரியில் தம்மை யானை மீது ஏற்றி பவனி கொண்டுவரச் செய்திருந்த ஏற்பாட்டிற்கு இணங்க மறுத்துவிட்டார். அவர், தாம் சௌராஷ்டிரத்தில் இதுபோன்ற **ஏகாதிபத்தியச் சின்னங்களை** நிறுத்துவதற்கு காரணமாக இருந்ததாகவும், இதனால் இங்குள்ள மக்களைத் திருப்தி செய்வதற்காக யானை மீதேறி பவனி வரச் சம்மதிக்க முடியாதென்றும் கூற, பிறகு ஊர்வலத்தின் முன், கால் நடையாக நடந்து சென்றார். இந்த ஊர்வலத்தில் 30 யானைகள் கலந்து கொண்டன”

★ ★ ★

“அஸ்ஸாம் அரசாங்கம் அன்பளிப்பாகத் தந்த யானை ஒன்றின் பராமரிப்புச் செலவுக்காக இருபத்தி ஆறாயிரம் ரூபாய்கள் ஆண்டு ஒன்றுக்கு மான்யமாகத் தரவேண்டும்—என்கிற பிரேரணை லோக்-சபாவில் கொண்டு வரப்பட்டது”—

இவை இரண்டுமே பத்திரிகைச் செய்திகள்தான்—குடை சாய்ந்த வாகனம்போல் ஆகிவிட்ட காங்கிரஸ் கட்சியின் நிலை விளக்குவதாகவும் அவை அமைந்திருக்கின்றன! கடை அடைப்பு நடத்துவதற்கு முன் தேசிய வீரர்கள் இந்த ‘இரு துருவ’ நாடகத்தையும் நடத்திக் காட்டுகிறார்கள்!

நல்பாரியிலே யானை மீதேற மறுத்திருக்கிறார் புதிய ராஷ்டிரபதி, தேபர் !

டில்லியிலே, ராஜேந்திரருக்கு பரிசளிக்கப்பட்ட யானையின் பாதுகாப்பிற்காக, மக்கள் சபையிலே மான்யம் கோரியிருக்கிறார்கள், மந்திரிமார்கள்!

ஏகாதிபத்ய சின்னமாம்; குட்டை மனப்பான்மையாம்; எனவே யானை பவனியை ஏற்றுக் கொள்ள முடியாதென்று மறுத்திருக்கிறார், தேபர்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் மற்ற காங்கிரஸ்காரர்களோ ஆளும் போதே அனந்தகோடி இன்பத்தையும் அனுபவித்திடத் துடிக்கிறார்கள்.

குடியரசுத் தலைவரின் கொட்டடியிலே, யானை!-ராஜபவனத்திலே-கஜமுகன் !

எங்காவது கேள்விப்பட்டிருக்கிறோமா, இந்த வேடிக்கையை ? அமெரிக்க ஜனாதிபதியின் மாளிகையாம் ‘ஒயிட் ஹவுசி’ல் யானையிருப்பதாக சரித்திரம் படித்திருக்கிறோமா? செக்கோஸ்லோ வேக்கிய நாட்டுத் தலைவர், பாதுகாப்புக்கு குதிரைப் படை வைத்திருக்கிறாரே தவிர, கௌரவத்திற்காக யானை வைத்திருக்கிறாரென்று யாராவது கேள்விப்பட்டதுண்டா? குட்டிச் சுவராகிவிட்ட இந்தக் காங்கிரஸ் துரைத்தனத்திலேதான் நாம் கேள்விப்படுகிறோம்—குயுக்தி நடத்தையை-கோணல் செய்கையை!

நாணல் புல்லைப் போல பசியால் மெலிந்து போயிருக்கிறார்கள், நாட்டு மக்கள் !

கண்ணீர் மல்கி, கசிந்துருகி, கையிலே திருவோட்டுடன், மெய்யிலே உயிர் ஒட்டிக் கொண்டிருக்க, பிச்சைக்காரர் பட்டாளம் வலம் வந்தபடி இருக்கிறது !

பிள்ளைக் கனி அமுதை சந்தைப் பொருளாக்கும் செயல் வளர்ந்து கொண்டே இருக்கிறது !

வேலையிழந்தோர், படிப்பு முடித்து புதிதாக வேலை தேடுவோர்-உலையிலிட்ட புழுப் போல வெந்து போகின்றனர்.

—இவர்களுக்கெல்லாம் பயன்தராமல் இருபத்தாறாயிரம் ரூபாய்கள் ஒரு யானை வளர்ச்சிக்கு தரப்படுகிறது.

யானை பவனியை ஏகாதிபத்ய சின்னமென்று கண்டித்த தேபர், இந்த ‘யானை போஷணை’யை எதிர்த்தாரா? ஒரே கூடாரத்தில் இருக்கலாமா இந்த பேதங்கள்? நல்பாரியில் கிளம்பிய கொந்தளிப்பும், குமுறலும் அப்போது எங்கே ஓடி ஒளிந்தன ?

ஒரே ஊருக்கு இரண்டு வழிகளைக் குறிக்கும் கைகாட்டிகளைப் பார்த்திருக்கிறோம் !

ஒரே பாடலை இரண்டு ராகத்திலே இசைக்கும் பாவாணர்களை நமக்குத் தெரியும் !

ஆனாலும், ஒரே கடிகாரம் முரண்பட்ட இரண்டு நேரத்தைக் காட்டுவதை, இந்த நாட்டு அரசியல் வட்டாரத்திலேதான் பார்க்க முடிகிறது !

தேபர் மட்டுமென்ன; ஏகாதிபத்திய மனப்பான்மைக்கு வேட்டு வைக்கும் வீராதி வீரரா? இல்லை.; இல்லை. அவரும் ‘வாய்ச்சவடால்’ காரர்தான்; பாரதமாதா நாடகக் கம்பெனியின் நிரந்தர நடிகர்தான்! இதோ ஜனவரி 31-ந் தேதிய செய்தியைப் பாருங்கள்:

பம்பாய்ப் பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையில் அன்றைய தினம் தேபருக்கு **நான்கு லட்சத்தொரு ரூபாய்** கொண்ட பணமுடிப்பும், ஒரு **வெள்ளிப் பேழையும்**, இனாமாகத் தரப்பட்டிருக்கிறது; பொதுமக்கள் தந்த பரிசு என்கிற பெயரால் !

உழைத்துவாழும் திறனிருக்க, நோய் நொடியற்ற உடல் வளமிருக்க, நல்லதொரு வருங்காலமும் எதிர் நிற்க, தேபர், காங்கிரஸ் கட்சியின் ராஷ்டிரபதியானதும் நான்கு லட்சத்தொரு ரூபாய்களை இனாமாகப் பெற்றிருக்கிறார்.

யானை அளவு வெள்ளிக்காசுகள் பெற்றது ஏகாதிபத்திய சின்னமல்லவாம்; யானைமீது ஊர்வலம் வருவதுதான் ஏகாதிபத்ய சின்னமாம்! காங்கிரசில் மண்டிக் கிடக்கும் உட்பூசலையெல்லாம் அடக்கியாளப்போகும் இந்த மாவுத்தர்தான், அஸ்ஸாம் அரசினரிடமிருந்து ஜனாதிபதி பெற்ற யானைப் பரிசைக் கண்டிப்பதற்குத் துணிவில்லாமல் ஊமையாகி விட்டார் !

பாவம் ; அவரையும், அவர் கட்டிக் காத்துவரும் கட்சியையும் குறைசொல்லி என்ன பயன்? அவர்கள் நன்றாக நாடகம் நடிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போலி நாடகத்தால்—புன்மை வேஷத்தால் நாட்டவர்களை எப்போதும் ஏமாற்றி விடலாம்—என்று இறுமாந்திருக்கும் அவர்களது போக்கு பரிதாபத்திற்குரியதுதான்!

* * *

## ஆசிரியர் மு. க. உடல்நிலை.

ஆசிரியர் மு. க. அவர்களுக்கு இன்னும் இடது கண்ணில் ஊறும், வலியும் இருப்பதின் காரணமாக மீண்டும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, ஐந்தாவது முறையாக ஆபரேஷன் செய்யப்பட்டிருக்கிறது. அவர் பூரண குணமடைய இன்னும் ஒரு ஆபரேஷன் தேவையென்றும், அது இந்த வியாழனன்று செய்யப்பட வேண்டுமென்றும் டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். இரண்டு வார காலம் மருத்துவ மனையிலேயே மு. க. ஒய்வு பெறுவார். நண்பர்கள் யாரும் அதிகமாக அனுமதிக்கப்படுவதில்லை.

* * *

## அடுத்த வாரம்........

அடுத்த இதழ் முதற்கொண்டு மகாபாரத விளக்கப் படங்கள் (தொடர் சித்திரம்) ‘முரசொலி’யில் வாரா வாரம் இடம்பெறும்.



கடவுளுக்குப் படைத்ததையல்ல; திட்டங்களைப் படைத்து விட்டு அண்ணாவும், தம்பிகளும் பகலுணவு அருந்துகின்றனர்.

## கூடினோம் பேரூரில் - கூர் ஏற்றினோம் வாளுக்கு !

தென்னாட்டு மக்கள் சக்தியின் இருதயமாம் தி. மு. கழகபொதுக் குழு சென்ற ஞாயிறன்று கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பேரூராம் சிற்றூரில் கூடி சர்க்காரின் நாடகத்தடைச் சட்டத்தை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

தி. மு. கழகத்தினர் முன்னைக் காட்டிலும் தீவிரமாகவும், பண்புடனும் திராவிட இயக்கக் கருத்துக்களை நாடகம் மூலம் நடத்திக் காட்டி மறுமலர்ச்சிக்கு ஆக்கமளிக்க வேண்டுமெனவும், சர்க்கார் தடுத்தால் எதிர்த்து நடவடிக்கை எடுக்கவும் பேரூர் பொதுக்குழு தீர்மானித்திருக்கிறது. சர்க்கார் நல்ல சர்க்காராக இருந்தால் இந்த முன்னெச்சரிக்கையை புரிந்து கொண்டு நாடகத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற்று விட வேண்டும்.

பேரூர் பொதுக்குழு, டில்லியைத் தூக்கி ஆவடியிலே வைத்து அங்கே அவர்கள் நடித்துக் காட்டிய 'சோஷலிசப் பாவைக் கூத்தை'யும் கண்டித்து, அந்த சோஷலிசம் டில்லி தயாரித்த நீலிவேஷக் கண்ணீர் என்றும் மெய்ப்பித்ததோடு, பைந்தமிழ் பூக்காடாம், தென்னாடு, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டிருப்பதையும் வன்மையாகக்கண்டித்து 20-3-55-ம் நாளை ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளாக நடத்துமாறும் கிளைக் கழகங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

பொதுக்குழுவில் மாநில மாநாட்டை ஜூன் மாதத்தில் திருச்சியில் நடத்துவதெனவும், மாநாட்டினது துவக்கச்செலவுக்காக தேவைப்படும் ரூ. 25 ஆயிரத்தை நாடகங்களின் மூலமும், மாவட்ட நன்கொடைகள் மூலமும் பெறுவதென முடிவு செய்யப்பட்டது. இந்த நிதி திரட்டும் பணியை கவனிக்க தோழர்கள் ஈ. வி. கி. சம்பத், அ. பொன்னம்பலனார், ஆசைத்தம்பி, மு. கருணாநிதி ஆகியோரைக்கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாக பொதுக்குழுவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடைசியாக தொழிலாளரிடையே பழகி, தொழிற் சங்க அமைப்புக்கான சூழ்நிலைகள் ஏற்படுவதை தி. மு. க. தலைமை நிலையத்திற்கு தெரிவிக்கக் கேட்டுக் கொண்டதோடு பேரூர் பொதுக்குழு முடிவடைந்தது.

அறிஞர் அண்ணாவின் தலைமையில் நடைபெற்ற பேரூர் பொதுக்குழுவில் அறுபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். கூட்ட முடிவில், பொதுக்குழுவை இத்துணை சிறப்பாக நடத்திக்காட்ட முனைந்த தோழர்கள் எஸ். ஏ. ராசமாணிக்கம், செயலாளர் பழனிச்சாமி, சி. டி. தண்டபாணி, அப்பாவு, அரசு, கிருஷ்ணமூர்த்தி, சி. எஸ். ஆர். மாணிக்கம், வணங்காமுடி, சேரலாதன், புகழேந்தி, ஜானகிராம் ஆகியோரையும் மற்ற செயற்குழு உறுப்பினர்களையும் கழகத் தோழர்களையும் அறிஞர் அண்ணா அவர்கள் பெரிதும் பாராட்டிப் பேசியிருக்கிறாரென்றால், அவர்கள் அனைவருமே திராவிடத்தின் பாராட்டுக்குரியவர்கள் தானே!



[ குமுறும் கடலென கோவை சிதம்பரம் பூங்கா ஸ்டேடியத்தில் திராவிடர் கூட்டம் !

(புகைப் படங்கள்: ராமு ஸ்டுடியோ, கோவை.)

## திருமண விதவை!

... கவிஞர் சுரதா ...



மணவாளர் பிணமானார். துடித்தேன்! உப்பின்
  வழிவந்த விழிநீரை உதிர்த்தேன்! வெந்தேன்!
மணமலர்கள் இனிசூடல் தவறாம். மற்றோர்
  மணம் செய்தல் ஆகாதாம் ! நான்கேட் கின்றேன் :
உணவுண்டு எனக்கென்றால், பசியும் உண்டு;
  உடல்உண்டேல், உணர்வுண்டு; உணர் விருந்தால்,
துணிமூடிக் கொண்டுள்ள உடல் அணைந்து,
  சுகங்காண புதுக்கணவன் வேண்டு மன்றோ ?

வெண்பட்டு உடுத்தென்ற வாயால்; இன்று,
  வெண்புடைவை உடுத்தென்று உரைக்கின் றாரே,
மண்ஆசை, பொன்ஆசை, மற்ற ஆசை,
  மறக்கின்ற பருவமிதா? எனை நெருங்கி,
செண்டே !-பெண் சித்திரமே ! என அழைக்கத்
  திரும்பவும் ஓர் கணவன்வரின் குற்றம் என்றால்,
பெண்டாட்டி செத்தவுடன் ஒருவன்; வேறோர்
  பெண்தேடி மணப்பதுவும் குற்றந் தானே ?

கோரைப்பாய் தனில்கூட நான் படுத்துக்
  கொள்ளுவது கூடாதாம்! வீட்டில் உள்ளோர்;
போரடித்த நெல், களத்தில் கிடத்தல் போலப்,
  புழுதியிலே உறங்கென்று உரைக்கின் றார்கள்.
நீரருகில் வளர்ந்த ஒரு செடியின் பூவை,
  நிலத்தின்மேல் வீசுவதாம்! மெத்தை மீது,
ஊரலைந்து திரிகின்ற நாய் படுத்து
  உறங்குதற்கு அனுமதியாம் ! சரியா சொல்வீர்?

அப்போதுக் கப்போது, அமுது ஊறும்
  அழகான உதடு தனில் ரசம் இருந்தும்;
உப்பில்லா உணவைப்போல்—பாதுகாக்கும்
  ஓடில்லா வீட்டைப்போல்—சிறப் பிழந்து,
இப்படியே நான்வாழ வேண்டும் என்றால்
  எதற்காக உயிரோடு இருத்தல் வேண்டும் ?
ஒப்பாரி வைத்திடவா இளமை? கண்ணீர்
  உதிர்த்தபடி ஏங்கிடவா, விதவை நாட்கள் ?

பண்டங்கள் தின்னுதற்கும்; நகைகள் யாவும்,
  பலர்காண அணிதற்கும்—மகிழ் வதற்கும்;
உண்டான தேயன்றி செய்து செய்து,
  உபயோகப் படுத்தாமல் அழித்தற் கல்ல!
கண்களிலே பருவஒளி; இனிக்க வைக்கும்
  கற்கண்டு உதடுதனில், துடிக்கும் சக்தி;
எண்ணத்தில் ஆண் ஆசை; எனக் கிருக்க,
  எதற்கு மலர் ? ஏன் நகைகள் ? என்கின் றாரே ?

மருதநிலச் சேற்றினிலே மலரும், செந்தா
  மரைமுகத்தில் திலகமிடல் தவறா ? வாசம்
தருகின்ற சந்தனத்தைப் பூசிக் கொள்ளல்
  தவறென்றால், ஏன் தவறு? பார்ப்பான் கூறும்,
விரதத்திலே இளைத்தல் சரியா? இல்லை,
  மீண்டும் நான் கன்னத்தில் முத்தம் வாங்கிச்
சுரதத்திலே இளைத்தல் சரியா? நீங்கள்
  சொல்லுங்கள் சிந்தித்து நல்ல தீர்ப்பு !

### கலப்பு மணம்

திருவாரூர் திரு. முத்தப்பா (பிள்ளை) அவர்களின் புதல்வியார் தோழியர் கௌரிக்கும், தோழர் சண்ணையனுக்கும் 6—2—55 அன்று தஞ்சையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. விழாவிற்கு தோழர் புலவர் குழந்தையா தலைமை வகித்தார். தோழர்கள் கருணானந்தம், கு. தென்னன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினார்கள். வாழ்க மணமக்கள்!

# அந்தச் சிலை!

(★)

பாராளு மன்றம்! பாங்கியர்கள் பக்கம் நின்று சமாரம் வீச, படைவீரர்கள் புடைசூழ, மன்னர் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கிருன். அப்போது வாயில் காப்போன் ஓடோடி வந்தான்.

"மன்னர் மன்னவா, மகான் ஒருவர் மன்றம் வர அனுமதி கோரி நிற்கிருர்"

"மகானு?"

ஆம், காவியுடை, கழுத்திலே உத்திராக்கம், காலிலே பாதகுறடு இந்தக் கோலத்தில் வந்திருக்கிருர் வேந்தே அந்த மகான்."

"உகந்த மரியாதையுடன் அவரை உள்ளே அழைத்துவா?"

"சித்தம் பிரபோ" — காவலன் விரைந்து சென்று கோட்டை வாயிலில் நின்ற சிவபக்தரை உள்ளே அழைத்து வந்தான். பக்தரின் பாதங்கள் பளிங்கு மாளிகைக்குள் பட்டவுடன் மயிலாசனத்தில் அமர்ந்திருந்த மன்னன் எழுந்து அவருக்கு மரியாதை செலுத்தினுன். பக்தர் பேச ஆரம்பித்தார்;

"மன்னு, மாநிலத்தில் புத்த மதவாதிகளும், ஜைனர்களும் பெருகி விட்ட காரணத்தால் சைவமதப் பற்று குறைந்து கொண்டே வருகிறது. அவர்களை நசுக்காமல் விட்டுவைத்தால் நாளடைவில் சைவமதமே அழிந்து, இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இது கண்ட கைலாயம் வாழ் சிவனுர் சினங்கொண்டார். பூலோகத்தில் பரவிவரும் புத்தமதத்தைப் பொசுக்க வேண்டும், ஜைன மதத்தை சின்னு பின்னு மாக்கி அதை அழிக்க வேண்டும் என்று நினைத்து விட்டார், உலகத்தையே படைத்த அந்த உத்தமனுக்கு இது ஒரு பெரியகாரியமா என்ன"

"ஆகா, அதிலென்ன சந்தேகம்!"

"அதற்காக என்ன செய்தார் நமது சிவபெருமான்! எதிரிலே வந்து எதிரியை மாய்த்தாரா? கையிலே சுழன்று கொண்டிருக்கும் சூளாயுதத்தை ஏவினுரா? கழுத்திலே சுற்றுக்கொண்டிருக்கும் நாகத்தைத்தான் தூண்டினுரா? இல்லை! இல்லை! அவ்வளவு சிறுமதி படைத்தவரல்ல நமது சிவன்;

'நமது கடவுள்கள்தான் வெளியே சென்று விரோதியை வெல்ல மாட்டார்களே!'

'எலியைக் கொல்லபுலியா போகவேண்டும்! எறும்பை நசுக்க யானை ஏன் வேந்தே?"

"பின் எப்படி எதிர் மதக்காரர்களை ஒடுக்கப் போகிருர் நம்மவர்?"

"லிங்கம் ரூபம்தாங்கி பூமிக்கடியில் புதைந்து கிடக்கிருர் சிவன். அவரது சிலையைத் தோண்டி எடுத்து சோமநாதபுரத்தில் பிரதிஷ்டை செய்து வைத்தாலே போதும்."

"அப்படியா!"

"ஆமாம், சிவநேசர் திருக்கூட்டம் அவ்வாறேதான் முடிவு செய்திருக்கிறது?"

வேந்தனுக்கு பக்தியின் வேகம் உடல் முழுதும் பரவத் தொடங்கியது!

"மகிழ்ச்சி மகரிஷியே, ஆனுல் இடையில் ஒரு சந்தேகம். அன்பு கூர்ந்து அடியேனுக்கு அதை நிவர்த்திக்க முடியுமா?"

"மன்னவனே, மனதில் எழும்புவதை ஏன் மறைக்க வேண்டும்? பாராளும் வேந்தர்களின் சந்தேகத்தை தீர்த்து வைப்பதற்கும், அவர்களைப் பாது காக்கவும் தானே பகவான் பார்ப்பனர்களை படைத்தார். பயமின்றிக் கூறு! தருகிறேன் தக்கவிளக்கம்!"

"சிவனுர் சிலைவடிவில் புதைந்திருக்கும் செய்தி தங்கள் செவிக் கெட்டிய தெவ்வாறு?"

"சபாஷ், நல்ல கேள்வி! இதுவரை என்னிடம் கேட்டறிந்து கொள்ளாத சந்தேகம். செல்வனே! அந்த மகாபிரபு மறைந்திருக்கும் இடத்தை, என்போன்ற பழுத்த பக்தர்களுக்கு கனவில் தரிசனம் தந்து செல்லிச் சென்றுள்ளார் அப்பனே!"

"மகிழ்ச்சி சுவாமிகளே!"

"வேந்தனே, வேறு வேலைகள் அடியேனுக்குப்பலஉள; எனவே"

"மன்னிக்க வேண்டும். தங்களுக் காகவும், தங்களின் நற்பணிக் காகவும் அரசாங்கக் கருவூலத்தையே திறந்து விடுகிறேன். வேண்டிய பொன்னும் பொருளும் எடுத்துச் செல்லுக!"

"உன் பக்தியைக் கண்டு பரம திருப்தியடைகிருேம் வேளைக் கொருமுறை 'சிவாயநம' வென்று சிந்தித்திரு, அபாயம் உம்மை அணுகவே அணுகாது.

'உத்தரவு'

"வருகிறேன்! திருச்சிற்றம்பலம்!"

"என் மீதும் கருணையிருக்கட்டும்"

"தடையில்லை தர்மசீலனே!" பக்தர் வந்த விஷயத்தை வெற்றியோடு முடித்துக் கொண்டு மன்னனிடம் விடைபெற்றுச் சென்ருர்.

★

இந்து மதத்தின் வளர்ச்சிக்காக பீகார், பீரார் பகுதியைச் சேர்ந்த குறுநில மன்னர்கள் பொருளை வாரி இரைத்துக் கொண்டிருந்த பதினேராம் நூற்ருண்டுக்காலம்! சங்ராச்சாரிகளும், சத்குருக்களும் சதித்திட்டங்கள் தீட்டி, சிற்றரசர்களை சக்கரைப் பேச்சால் மயக்கி விட்டிருந்த சமயம். அந்த நேரத்திலே வடநாட்டுக் கொலு மண்டபங்களிலே நடைபெற்ற ஏமாற்று நாடகத்தின் ஒருகாட்சி தான் மேலே இருப்பது.

மண்ணுக்கடியில் லிங்கம் புதைந்து கிடக்கிறதாமே! மக்களைக் காக்க நினைக்கும் மேகஸ்வரன் ஏன் மண்ணுக்கடியிலே புதைய வேண்டும்? எதற்காக மன்னர்களின் கருவூலக் கிடங்குகளை காலியாக்கவேண்டும்? ஒருவேளை இந்த சந்நியாசிகளே லிங்கத்தைப் புதைத்து வைத்து விட்டு சதி செய்திருக்கக்கூடாதா? வரும் பொருளுரைக்கும் மந்திரிமார்கூட மௌனியாகிவிட்டார்கள்; ஏன் என்று கேட்டவில்லை.

சோமநாதபுரத்தில் ஆலயம் எழுப்பப்பட்டது. அன்ன சத்திரங்கள், ஆரியப்பாடசாலைகள் திறக்கப்பட்டன, பதினுருயிரம் பார்ப்பனர்கள் பரவச வாழ்வு நடத்தக்கூடிய சொர்க்க புரியாக, மாற்றப்பட்டது சோமநாதபுரம். தங்கள் வாழ்வு மலர்ந்து விட்டதாக வெற்றி விழா கொண்டாடிய தெர்ப்பை தாக்கிகளுக்கு அளவில்லை! தொண்டின் பெயரால் பெண்டுபிள்ளைகளுக்கு வீடுவாசல் சேர்த்த 'தொப்பை வயறு'களின் பட்டியல் சோமநாதபுரத்தில் பெருகிக் கொண்டே போனது. 'சிவா சிவா' என்ற சொல்லுக்கு உள்ள செல்வாக்கு சிந்தனைக்குச் செயலாற்றும் சிலர்களில் பணிக்கு இல்லை! 'அரகரா' என் போருக்குக் கிடைத்த வரவேற்பு அறிஞர் பெருமக்களுக்குக் கிடைக்கவில்லை. சோமநாதபுரம் அந்த அளவுக்கு ஐதீகக் சாக்கடையில் அமிழ்த்தப்பட்டுவிட்டது.

★

நாட்கள் நகர்ந்தன. அந்த நேரத்தில் வடநாட்டின் ஒரு பகுதியை ஆண்டு கொண்டிருந்த கஜனிமாமூதுவின் கண்கள் சோமநாதபுரம் கோயில் சொத்துக்கள் மீது பாய்ந்தன. மகமது கஜினி மதவெறி கொண்டவனே, அல்லது மாசுள்ளம் படைத்தவனே அதுபற்றி நமக்குக் கவலையில்லை. 1024-ல் கஜினி கையாண்ட சிலை உடைப்பு விழா-சோமநாதபுர முற்றுக்கை—சிந்தனைக்கு வேலை கொடுத்ததுமல்லாமல்—வேதம், புராணம், சாஸ்திரம் என்ற கருப்புத் திரையின் மறைவில் மறைத்து வைத்திருந்த சூழ்ச்சியை வீழ்ச்சியுறச் செய்தது மல்லாமல் பார்ப்பனச் சேரிகளுக்கு நல்லதொரு பாடத்தையும் கற்பித்தது.

"முகமதிய மதத்தை வளர்க்க வேண்டும், மலைபோல செல்வத்தைக் குவிக்க வேண்டும்" இவை இரண்டும் கஜினியின் இதயத்தில் சுடர்விட்டெரிந்து கொண்டிருந்த ஆசை. ஆசையை நிறைவேற்ற மதப்பிரச்சாரம் செய்தான். இந்துக்களின் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கினுன். இந்த வரிசையில்—குறிப்பிடத் தக்கதும் சரித்திரத்திலே இடம் பெற்றுள்ளதுமானது சோமநாதபுர முற்றுகை!

★

பகலவன் சாய்ந்து பால் நிலவு பவனி வரப்போகும் வேளை! கஜினி உக்காவை குடித்துக் கொண்டே ஒரு ஒற்றனை அழைத்து "நீ இப்போதே சோமநாதபுரம் சென்று அங்குள்ள நிலைமையை அறிந்து வா" என்று கட்டளையிட்டான். விடை பெற்றுச் சென்ற ஒற்றன் சோமநாதபுரம் போய் இரண்டு நாட்கள் கழித்து வந்து சோமநாதபுரத்தின் நிலைமையை எடுத்துக்கூறினுன். கஜினிக்கு ஆசை விடவில்லை. தளபதியை அழைத்து "தக்கபடை தயாராகட்டும்" என்று உத்திர விட்டு விட்டான்.

கஜினியின் படைகள் சோமநாத் புரம் நோக்கி வந்து கொண்டிருப்பதை அறிந்த பார்ப்பனர்கள் மன்னர் பலரின் உதவியை நாடினுர்கள். அம்முயற்சி பயனில்லாது போகவே உயிரைக் கரும்பாக எண்ணியவர்கள் படகிலேறி ஓடிவிட்டார்கள். சூழ்ச்சியால்-வஞ்சகத்தால் கஜினியை ஏமாற்றி விடலாமென்று எண்ணியவர்கள் மாத்திரம் சோமநாதபுரத்திலிருந்தனர்.

கஜினியின்படை. முரசை முழங்கிற்று. அந்த முரசொலியும், குதிரைகளின் குளம்படி ஓசையும் பூமியை அதிரச் செய்தன.

குறிப்பிட்ட நேரத்தில் கஜினி தன்னுடைய பாசறையிலிருந்து கோயிலைநோக்கிநடந்துசென்ருன். அங்கு காணப்பட்ட வைர நகைகள் கஜினியின் வீரத்திற்கு வலுவூட்டின. போதையேறியவனும் புன்முறுவல் பூத்தமுகத்தோடு மண்டபத்திற்குள் நுழைந்தான். "வருக. வருக, தங்கள் வரவால் ஆண்டவன் சந்நதி புனித மடையட்டும். தங்களுக்காகவே இந்த வைரச்சிம்மானத்தை அலங்கரித்து வைத்துள்ளோம். வேண்டுமானுல் நீங்கள் அதை எடுத்துக் கொள்ளுங்கள். அதோ, தங்களுக்கென பொறுக்கி எடுத்த தங்கப்பாறை

◯ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## புதுமை இல்லை!

"ஆவடி காங்கிரசிலே புதுமை ஒன்றும் நிகழ்ந்துவிடவில்லை. வழக்கம் போல் பண்டித நேருதான் மூலவராக இருந்தார். அவருக்குத் தான் அங்கேமுக்கியத்துவம் இருந்தது. அவர்தான் தலைவரைப் போலவும் விளங்கினுர். இதிலென்ன புதுமை?"

### மாளிகை வாழ்வு

"காந்தியார், கொள்கையைப் பின்பற்றுவதில் கடைசிவரை கண்டிப்போடு இருந்தார். ஆனுல் அவரது பின்னேடிகள் அவருக்கு முற்றிலும் முரணுனவர்களாக இருக்கிருர்கள்,

காங்கிரஸ் செயற்குழு, மாநில மந்திரிகளை எளிமையாக வாழச் சொல்லுகிறது. ஆனுல் டில்லி மந்திரிகள் மட்டும் மாளிகைகளில்தான் வாழுகிருர்கள் பண்டிதநேரு வசிக்கும் மாளிகைதான் டில்லியிலேயே அழகிலும், அளவிலும் இரண்டாவதாகும்" — காரவன்



உபதேசிகர்:- மனிதன் எதை சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்?

மாணவன்:- நகத்தை!

உபதேசிகர்:- முட்டாள்! அதையல்ல நான் கேட்பது! மனிதன்இருதயம் எப்படி இருக்க வேண்டும்?

மாணவன்:- ஓ! அதுவா! மனிதன் இருதயம் ஆதேன் வடிவத்தில் இருக்கவேண்டும்.



# தையல் நாயகி

எஸ். எஸ். தென்னரசு

'அழகு தன் பூரண சக்தியையும் அவளுடைய உடற்கட்டில் பிரயோகித்திருந்தது. செப்புக்குடமேந்தி அந்த சிற்றிடையாள் வந்துவிட்டால், சிப்பாய்கள் அத்தனை பேரும் தையல் நாயகி மீதுவைத்த கண் வாங்காமல் மெய்மறந்து போவார்கள். ஆனைமலை முகாமிலே நாங்கள் தங்கியிருந்த காலத்தில் பட்டதுயரும், சொட்டிய கண்ணீரும் அந்தத் தோகைமயிலாளின் அழகுத தோற்றத்தாலேயே மறந்துபோய்க் கொண்டிருந்தன.

''இச்சைக் குறியவளே, இன்மொழிப்பாவாய்!'' என்று ஆசை வார்த்தை பேசி அந்தப் பச்சைக் கிளியை வளைத்திட எண்ணிய சிப்பாய்களெல்லாம் தையல்நாயகியின் சுடுசொல்லுக்கு இலக்காகி சோகத்திலாழ்ந்த கதைகள் எனக்குத் தெரியும்.

காதல் பணத்திலே பிறக்கும் என்பார்கள்: அழகிலே பிறக்குமென்பார்கள்: இவை மட்டும் போதாதுதான்; அழகும், பணமும் தான் காதலுக்கு முகப்பு வாயிலென்றால், என்னைப்பொருத்த வரையில் அந்தத் தத்துவத்திற்கு பெருந் தோல்விதான். என்னைக் காட்டிலும் அழகானவர்கள் அந்த முகாமிலே இருந்தார்கள்; என்னைக் காட்டிலும் அதிகமாக சம்பளம் வாங்கக் கூடிய மேலதிகாரிகளும் இருந்தார்கள், ஆனால் தையல்நாயகிக்கு என்மேல் காதல் பிறக்கக் காரணம்? மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை! பேரழகும், அதே நேரத்தில் ஊமைத்தனமும் கொண்ட ஆண்களைவிட சுமாரான அழகுடைய, ஆனால்எதையும் வெளிப்படையாக துணிந்து பேசக்கூடிய ஆடவர்களைத்தான் பெண்கள் பெரிதும் விரும்புகிறார்கள். என் கதையே இதற்குப் போதுமான சான்றாகும். தனித்த முறையில் தையல்நாயகியை பல முறை நான் சந்தித்தேன். ''தையல்நாயகி, தமிழகத்தின் தென் கோடியிலிருந்து வந்திருக்கிறேன்; குடும்பத்தின் நலன் கருதி நான் பட்டாளத்தில் சேர்ந்தேன். இங்கு வந்து உன்னைக்கண்ட நாள் முதலாக, ராணுவ அணிவகுப்பில்கூட என் மனம் செல்லவில்லை செண்பகமே'' இப்படிப்பலநாள் அவளைக் கெஞ்சி இருக்கிறேன். ''இன்று போய், நாளை வா'' என்றே சொல்லிக்கொண்டு வந்தாள். ''இன்று போய், நாளை வருகிறேன்; என்று வது 'நன்று' சொல்! ஆனால் நஞ்சு தந்துவிடாதே பெண் மயிலே'' என்றே நான் ஒவ்வொரு நாளும் பதில் கூறிவந்தேன்.

★

அன்று ஞாயிற்றுக்கிழமை! தையல்நாயகியின் அன்புக் கட்டளைப்படி ஆற்றோரத்துத் தென்னந் தோப்பில் அவளுக்காகக் காத்திருந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் அவள் வந்துவிட்டாள். 'முடியாது' என்று சொல்லி ஆயுள் தண்டனை விதித்துவிடுகிறாளோ, 'சரி' சொல்லி என்னை இன்பக் கடலில் ஆழ்த்துகிறாளோ என்று விழித்துக்கொண்டிருந்தேன்.

அதற்குள்ளாக அவள் ஆற்றின் இக்கரைக்கு வந்துவிட்டாள். ஆனால் அவளைத் தொடர்ந்து ஒரு முதுகிழவர் வந்தார். நான், பயந்து தென்னங் கூட்டத்திற்குள் ஓடிவிட்டேன். நிராயுதபாணியாக இருக்கும்போது, எதிரியாள் கையிலே துப்பாக்கியோடு வந்தாலும் எதிர்த்துப் போரிட போர்ப்பயிற்சி கற்றுக்கொண்ட என்னால் காதல் களத்திலே நிற்கமுடியவில்லை. இத்தனைக்கும் கையிலே துப்பாக்கி-இடுப்பிலே குத்துவாள். இருந்தாலும் அந்தக் கிழவனைக் கண்டதும் என்னை அறியாமல் என் கால்கள் துடித்தன: கவினூறும் சோலையிலே காதல் கானம் இசைக்கும் வானம்பாடிகளாய் கலந்து உறவாடும் காதலர்கள் தெருவிலே நடைவண்டியோட்டும் பாலகர்களைக் கண்டால் திகிலடைகிறார்கள்; சோலையிலே சிட்டு செடியை அசைத்தால்கூட அந்த இரு இள இதயங்கள் வெடித்திடும் நிலை எய்துகின்றன. தமிழகம் காதலுக்குத்தரும் மரியாதை இது! இல்லற ஜோடிகள் தாளுக எழுப்ப முனையும் வாழ்வு மாளிகையின் தலைவாசல் பயங்கரமானதாகத் தானிருக்கிறது!

கிழவனும் குமரியும் தோப்புக்குள் நுழைந்துவிட்டார்கள். எங்கள் முகாமிலே இருக்கும் பட்டனைத் தட்டிவிட்ட இயந்திரத் துப்பாக்கியைப்போல என் இதயம் துடித்துக் கொண்டிருந்தது.

''உஷ்...ஷ்! தைலா! தைலா!'' மெதுவாக நான் கூப்பிட்டேன்.

அவள் சிரித்தாள், ''ஏம்மா, எங்கே காணோம்; வந்திருப்பாருன்னு சொன்னியே!'' என்றார் கிழவர்,

''இல்லையப்பா! சரியா ஆறு மணிக்கெல்லாம் வருவதாகச் சொன்னார். ஒருவேளை 'காப்டன்' உத்தரவிட்டிருப்பார்''— என்றாள்.

ராணுவ முகாமிலே ஆஜர் பட்டியல் வாசிக்க இன்னும் அரைமணி நேரமே பாக்கி இருந்தது. அந்தப் பயம்வேறு ஒருபக்கம் என்னை உறுத்திக் கொண்டிருந்தது, ''தைலா! ஏன் இவ்வளவு நேரம்'' என்று சத்தம் போட்டுக் கொண்டே மரத்தின் மறைவிலிருந்து தலையைக் காட்டினேன்.

'கோவைக்குப் போயிருந்த அப்பா வரட்டுமே என்றிருந்தேன்' என்று சொல்லி அந்த முதியவருக்கு அறிமுகம் செய்துவைத்தாள். எங்களது நிச்சய தாம்பூலம் ஆனைமலை அடிவாரத்தில், ஆற்றங்கரை ஓரத்தில் நடைபெற்றது. என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இன்பத்தின் எல்லையையே பிடித்துவிட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். ''பிரமோஷன்'' கிடைத்து விட்டதைப்போல எண்ணிக்கொண்டே, அந்த நன்னாளை — தையல்நாயகியை கைப்பிடித்து மெய்யுறவு பூணும் பொன்னாளை எண்ணிக்கொண்டே முகாமுக்கு விரைந்தேன்.

★

அன்று திருமண நாள்தான். ஆனால் அந்த மண விழாவை விளம்பரப்படுத்தும் சிறப்பான அம்சங்கள் ஏதும் அங்கில்லை. எங்கோ பிறந்து, எங்கோ படித்து, ஏனோ சேர்ந்தவன்தான் ராணுவத்தில்; எப்படியோ தையல்நாயகியோடு தொடர்பு ஏற்பட்டுவிட்டது. பழுத்த கிழவர், தன் கடைசி மகளை, அவளுக்கு பிடித்த இடத்தில் திருமணம் செய்துகொடுக்க எண்ணினார்போலும்! இல்லாவிட்டால் நீங்களெல்லாம் எளிதிலே நம்பமுடியாத ஒரு நிகழ்ச்சியாக எனக்கு திருமண ஏற்பாடுகள் நடைபெறுமா? பட்டாளத்தில் சேர்ந்தாலும் — பெண்ணொருத்தியைக் கண்டாலும் — பேரின்பம் கொண்டாலும்-பெற்றோரைச் சந்தித்து மண விழாவுக்கும் ஏற்பாடு செய்தாலும், என்று கிண்டல் செய்யமாட்டீர்களா? நம்பக்கூடிய காதலையே நிந்தனைக்குள்ளாக்கி நெஞ்சு கலங்கவைக்கும் நாசகார சமுதாயமல்லவா இது!

★

நான் மணமேடையில் அமர்ந்தேன். என்னைப்போலவே எனது நெருங்கிய நண்பர்கள் ஒருசிலரும் ரகசியமாகவே திருமணத்திற்கு வந்திருந்தார்கள். ஓய்வு நேரத்தையும் ஒழுங்காகத்தான் கழிக்க வேண்டும் என்று கூறும் ராணுவச் சட்டம், திருமணவிழாவை தீச்செயல் என்று முடிவு கட்டியிருந்தது. இல்லறத்திலே மூழ்கி விட்டால் ராணுவப்பணியில் ஆர்வம் குன்றிவிடும் என்று அந்த 'தயாள சிந்தையினர்' கருதியிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு அறிவுறுத்துவதற்காகத்தான் நண்பர்கள் ரகசியமாக வந்திருந்தார்கள் என்று சொல்கிறேன். ஆமாம், நண்பர்கள்தானே எனக்கு உற்றார் உறவினரெல்லாம்! அத்தை மகள் ஆரவல்லியை-அந்த நொண்டிப் பெண்ணை திருமணம் செய்து கொள்ளவில்லையே என்று தந்தை சிந்தை கலங்கி விடுவாரே என்று அஞ்சியே என் பெற்றோர்களுக்குக்கூட நான் செய்தி தெரிவிக்கவில்லையே! அவ்வளவு ரகசியமாக அல்லவா திருமணவிழா நடைபெற இருந்தது, இத்தனை அவதிகளுக்கிடையே ஏற்பாடான திருமணம் நடைபெற்றதா? தையல்நாயகியோடு நான் கைகோர்த்து வாழமுடிந்ததா?. அவளை உரிமையாக்கிக் கொள்ள உள்ளூர என் உள்ளத்தில் நெளிந்து கொண்டிருந்த ஆசை என்ன வாயிற்று? என் திருமணம் நடைபெறவில்லை! நாங்கள் புகஇருந்த வாழ்க்கைப் பூங்காவின் இரும்புக் கதவுகள் எங்களது ராணுவத் தலைவர் ரங்கராஜாவினால் பூட்டப்பட்டு விட்டது. ஆமாம்;

ஜாதி முறைப்படி தையல்நா… அவள் வீட்டின் உள்ளறை… ருந்த குல தெய்வத்தை வண… விட்டு மணமேடைக்கு வரு… நேரம், என்னையும் அறியாம… தூக்கி வாரிப் போடும்படியா… எங்கள் முகாமைச் சேர்ந்த "… கார்'' மணவீட்டின் முன்ப… வந்து நின்றது. ரங்கராஜா சு… பிரம்போடு வீடு புகுந்தார்.

''முகுந்தா!''

''சார்!''

''ராஸ்கெல்! ஏறு காரிலே!''

விழி நீர் ஊற்றெடுக்க ம… விழாவுக்கு வந்திருந்தோ… பார்த்தேன். அத்தனை பேருடை… பார்வையும் என்மேல்தான் இ… தது. பார்வை அம்புத்தும் ப… பத்தில் துளைத்து எடுக்கப்ப… டதுதான் என்றாலும் எனக்கு … வொன்றும் கருங்கேலின் வி… கொட்டாகத்தானிருந்தது.

★

பாலருந்தி பழம் தின்று மு… இரவை-தெவிட்டாத தேன்ர… —என்றும் மறக்கவொண்… இன்ப ராத்திரியாக கழிக்கவே… டிய நான் அதே இரவை சிறை… கூடத்தில் கழித்தேன்.

ராணுவச் சட்டத்திற்கு முரண… நடந்ததாக என் மீது குற்ற… சுமத்தி எனக்கு ஒருமாதக் க… காவல் தண்டனை தரப்பட்டி… தது.

பலகணிவழியாக படுக்… யறை புகுந்து, பட்டொளிப… வேண்டிய முற்றிப்போன வ… மதி, சிறைக்கூடத்தின் உச்சி… எங்கோ இருந்த இடைவெளி… யாக தலை நீட்டியது. அந்த… வின் ஒவ்வொரு நிமிடத்தை… ஆயிரம் கூறுகளாக்கி அணு… வாக சுவைத்திட வேண்… நான், சிறையின் கம்பிக்க… ஓரத்தில் ஓடிக் கொண்டிரு… பெருச்சாளிகளின் பெருமூச்… யும், கொலை, களவு செய்தோ… கனவுப் புலம்பலையும் கே… சகித்துக் கொண்டிருக்க வே… டியவனானேன். எப்படியோ, … மாத காலம் ஓடிவிட்டது.

நான் இருந்த சிறையின் க… கனை சாவிபோட்டுத் தி… விட்ட போலீஸ்காரர் வெண்… டம் பிடித்தவராக இருந்தா… எப்படியோ என்னையறியாமல் … தக் கைகளைப் பிடித்து என் … களில் ஒத்திக் கொண்டு… டேன்.

சிறைக் கோட்டத்தின் … லிலே காப்டன் ரங்கராஜா … 'பழையஜீப்' காருடனேயே … திருந்தார். தொழில் முறை… அவருக்கு மரியாதை செலு… னேன். முகாம்பயிற்சி, வழ… போல நடந்து கொண்டுவ… ஆனால் அதிகாரப்பூர்வ… எனக்கு ஒரு வாரம் ஓய்வு … பட்டது—அன்பின் மிகுதி… தரப்பட்ட ஓய்வல்ல அது… யுணவின் கோளாறால் சிறு… ருந்த என் உடற்கட்டை … படுத்தி மீண்டும் என்தல… இருப்புக் குல்லாயையும், இ… ரன்ன ராணுவச்சுமைகளையும் … கச்செய்வதற்குத் தரப்ப… ஓய்வுதான் அந்த ஒருவார… முறை!

★

பின்னிருட்டு! அன்றிரவு … வத் தளத்தைக்காக்க வே…

Filmed as bound

...ற என்னைச் சார்ந்தது. குண் ...ற்றிய துப்பாக்கியைத்தாங்கிக் ...ண்டே கூடாரங்களைச் சுற் ...படியிருந்தேன், எல்லோரும் ...ர்ந்து விட்டார்கள். மணி ...ண்டாகி விட்டது! எனக் ...ரு அசட்டுத் தைரியம்! ஆயு ...தாங்கியபடி நேராக தையல் ...கி வீடு நோக்கி நடந்தேன், ...பூட்டியிருந்தது. நாய் ...ின் இரைச்சலுக்காக ...று ஒதுங்கலாமென்று எண்ணி ...ட்டோரத்திலிருந்த பூவரச ...த்து மறைவில் பதுங்கச் சென் ...ன்.

...பின்பு, துப்பாக்கியை நிமிர்த்தி ...செய்து கொண்டு அந்தக் கூரை ...ட்டின் கொல்லைப் பக்கமாகப் ...பானேன். மண் சுவற்றிற்கும், ...தன்னங் கிற்றுக்கும் இடையே ...ண்ணெய்விளக்கின் மாம்பல நிற ...ளி தெரிந்தது — இடையிடையே ...ள் அரவம்! அதைத் தொடர்ந்து ...கரெட் வாடை! சற்று நேரத் ...ற்குப் பிறகு ஒரு பெண்ணின் ...வதனைக்குரல்! விக்கல்! விம்மல்! ...கொஞ்ச நேரம் நிதானித்துப் ...ர்த்த பின்பு தான் அந்தப்பெண் ...தயல்நாயகி தான் என்று ...தரிந்து கொள்ள முடிந்தது! ...பச்சைக் கவனித்தேன். "முடி ...து! தையல்நாயகி செத்துப்பிண ...கி, அவளுடைய அழகுடல் ...றிப் போனபின்புதான் நீங்கள் ...வளைத் தீண்டமுடியும். அது ...ங்களுக்கு விருப்பமானால் செய் ...ங்கள்! இஃம்! இதோ உங்கள் ...கயிலிருக்கும் துப்பாக்கியாலே ...ய சுட்டுவிடுங்கள்" என்று ...தயல்நாயகி சொன்னாள். ...எனக்கு வெறிபிடித்துவிட்டது. ...எனக்கு உரிமைப்பட்ட பொருளை ...ன்னொருவன் வலுக்கட்டாயப் ...டுத்திஅனுபவிக்கமுயலும் போது ...ாதுகூட வீரனாவதில்லையா? வாகை ...ாருக்கு என்பதை அவர்கள் ...ண்ணிப் பார்ப்பதில்லையே! எனது ...இரட்டைக்குழல் துப்பாக்கியை ...ளக்கொளி வந்து கொண்டிருந்த ...அந்தச் சிறு சந்தில் பொறுத்தி ...னேன். உள்ளிருந்து உருமும் ...அந்த வெறியனின் பேச்சுக்குரல் ...ளம்பும் பகுதியைக் கணக்கிட்டு ...கண்களை மூடிக்கொண்டு சுட்டு ...விட்டேன், அந்தக்குக்கிராமமே ...கிடுகிடுத்து விட்டது! அவ்வளவு ...பெரிய வேட்டுச் சத்தம்! 'ஆ!' ...என்று அந்த மனித மிருகம் உள்ளி ...ருந்து அலறியது, தையல்நாயகி ...'ஐயோ, படுபாவி' என்று கதறி ...ளாள். கிராமமே திரண்டு விட்டது. ...ஆண்களும், பெண்களுமாக கை விளக்குகளுடன் வெளிக்கிளம்பி விட்டார்கள்.

கள்ளி, கற்றாழை என்று பார்க்க வில்லை-கழனிகளின் வரப்புகளைப் பற்றிக் கவலைப்படவில்லை; முயலாக ஓடினேன் — முகாமை அடைந்த பின்புதான் ஓடிவந்த திக்கையே திரும்பிப் பார்த்தேன். உடல்நடுக்கம் நிர நான்கு மணி நேரம் பிடித்தது.

★

காலை மலர்ந்தது. ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி யொன்றை என் தந்தை கடித மூலம் தெரிவித்திருந்தார்: அதில் "பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஓடிய உனது சிற்றப்பனும், எனது தம்பியுமான ரெங்கராஜா நீ இருக்கும் ஆனைமலை முகாமிலேயே காப்டனாக இருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது. விபரமறிந்து எழுது" என்று குறிப்பிட்டிருந்தது. கடந்த இரவு நடந்த நிகழ்ச்சியில் நான் சிக்கிக்கொண்டாலும் இந்தக் கடிதத்தைக் காட்டி காப்டனின் உதவியை பெற்றுவிடலாமென்ற தைரியம் எனக்குப் பிறந்து விட்டது. அந்தப் பூரிப்பிலேயே, சங்கொலித்ததும் அணிவகுப்புக்குச் சென்றேன், ஐயோ, என்னால் பேசமுடியவில்லையே! இருதயத்தில் தீப்பற்றிக் கொண்டதே! அதோ மரண ஓலை வாசிக்கின்றானே ராணுவ வீரன். கேளுங்கள் "நமதுமுகாம் காப்டன் ரங்கராஜா அவர்கள் நேற்றிரவு கொடியவனொருவனால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார், அன்னாரின் பரிதாப மரணத்திற்கு நமது ஆழ்ந்த அனுதாபம்!" கேட்டீர்களா இந்தத் துன்பக் கதையை! என்னைத் தயவுசெய்து காட்டிக் கொடுத்துவிடாதீர்கள். நான் போகிறேன் - செத்துப்போன தையல்நாயகியை வளர்த்த இந்த ஆனைமலை பிரதேசத்திடம் அனுதாபம் தெரிவிக்கப் போகிறேன். ஆம்! அவளும் தான் செத்துப் போனாளாம்! எப்படி என்று எனக்குத் தெரியாது! இரண்டு பிணங்களும் தான் கோவை நகர் ஆஸ்பத்திரிக்கு பரிசோதனைக்கு போயிருக்கின்றனவாம்! ஆனால் அவளுக்கு முகாமிலே அனுதாபம் இல்லை! இதோ, இன்றுமாலை நான் விடப்போகும் கடைசி மூச்சுத் தான் அந்த தமிழச்சிக்கு — தையல்நாயகிக்கு எனது அனுதாபம்!

★ ★



ஆண் கழுதை : என்னடி அது, அவ்வளவு நேரமா தின்னுகிட்டிருக்கே?

பெண் கழுதை : யாரோ சி... மு. க. வை திட்டி 'கன்னா பின்னா'ன்னு விளாசியிருக்காங்க — அந்தப் பேப்பரைத்தான் அவ்வளவு நாழியா சுவைச்சு திங்கறேன்!




வா, இரவே வா! எழிலாடும் கருப்புப் பெண்ணே, வா! நீ அழகி — பேரழகி. கருப்புப் பெண்ணை நான் விரும்புகிறேன். நேசிக்கிறேன். ஆனால் எனக்குக் கல்யாணமாகி விட்டதே! அதனால் என்ன; களங்கமற்ற உள்ளத்தோடு உன் அழகை வர்ணிப்பது குற்றமா என்ன, மரகத மங்கையே! 'காரிருள் காதலியே' என்று உன்னைக் கூப்பிட்டால் கடிந்து கொள்: நியாயம். தோழியே என்று அழைப்பதில் தோஷமில்லை யென்று நானே முடிவுகட்டி விட்டேன்.

இரவுப் பெண்ணே! இப்படி வா! உட்கார்! உட்கார்ந்தாயா, சரி மகிழ்ச்சி! கருப்புப் பெண்ணை நான் விருப்புகிறேன். காரணம் தெரியுமா? கருப்புப் பெண் சிரித்தால்தான் முத்துப் பற்களுக்கு முதலிடம் கிடைக்கிறது. பெண்ணின் அழகே கண்ணில்தானே! கருப்பு மேனியில் வெள்ளை விழி. ஆகா, என்ன கவர்ச்சி! என்ன கவர்ச்சி!

நீயும் கருப்பாயிருந்து சிரிப்பதால்தான் உன் நட்சத்திரப் பற்களின் வைர ஒளியை வையம் புகழ்கிறது. நீ சிரிக்கிறாய்; ஆயிரம் முத்துக்களை அடக்கி வைத்துள்ள சிப்பியைப் பிளந்ததுபோல் இருக்கிறது உன் வாய். பெண்ணே! உன் இருதயத்தின் படபடக்கும் ஒலிகூட என்காதில் விழுகிறது. அவ்வளவு அமைதியாயிருக்கிறாய் நீ. நீ அமைதி அலங்காரி. ஆனாலும் உன் இருதயம் சாந்தியற்றது. சஞ்சலம் நிறைந்தது. அதன் துடிப்பை உணருகிறேன் நான். உனக்கு ஒரு காதலன் வேண்டும். கள்வர்கள் உன்னைக் காதலிக்கிறார்கள். நீ வெறுக்கிறாய். வேதனைப் படுகிறாய். குடியர்கள் உன் மடியைத் தேடி அலைகிறார்கள். நீயோ குமுறுகிறாய். அதையும் உன் இருதயம் சொல்லத் தவறவில்லை. கனி குலுங்கும் சோலைகளில், காவிரியின் கரைகளில், கட்டித் தழுவும் காதலர்களின் சரச உரையாடல்களைக் கேட்டுக் கேட்டுத் தினவெடுத்த உன் இருதயம் கனத்துப்போய்க் கிடக்கிறது. நீ சிரிக்கிறாய், வெளி உலகுக்கு! ஆனால் உன் இருதயம் அழுவதை என்னால் உணர முடிகிறது. காதலுக்கேற்ற கட்டழகனை கிடையாதா என ஏங்குகிறாய். நானோ கல்யாணமானவன். என் வீடு தலை ராணியை வெளியே விட்டுவிட்டு வெந்து கொண்டிருக்கிறேன், வெஞ்சிறைதனிலே!

கவிஞர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் உன் சுயம்வர மண்டபத்திலே காலையெடுத்துவைத்து-நீ மாலையெடுத்து வரும் சமயம் உன் மந்தகாசப் புன்னகை கண்டு, மயக்கமுற்று உலகத்துக்குத் தேவையாக ஏதாவது உளறியபடி விழுந்து விடுகிறார்கள்.

நீ விட்ட கண்ணீர்-தோட்டத்து மலர்களிலே, காட்டகத்துப் பூக்களிலே, பனி நீராகத் தேங்கியிருப்பதை நான் காணாமலில்லை. ஆனாலும் என் செய்வது! ஆறுதலுக்கு வழியிருக்கிறதா என்று நீ பார்க்கிறாய்; ஆருயிர்த் தோழிகள் யாராவது வருவார்களா என்று எதிர்பார்க்கிறாய்......அவர்களும் வரத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் உன் நல்ல பண்பின் மறைவிலே நாச நாடகம் நடத்திச் சம்பாதிக்கிறவர்கள். நலிந்து போன மாதர்கள்.

ஆமாம்; உன் சகோதரன் சந்திரன், வெண்துகில் ஒன்று கொடுத்தானே; அதை யார் பிடுங்கிக் கொண்டது! இயற்கையாண்டிதானே! அப்பப்பா! அவன் ஒரு 'மாயக் கண்ணன்'. உன் சேலையைத் திருடுவதிலே அவனுக்கு ஒரு திருப்தி. திருட்டுப் பயல். அவனைத்தான் உனக்கு அறவே பிடிக்காதே.

பிறகு எப்படித்தான் உனக்குத் திருமணமாவது. கருப்புப் பெண்ணே! இரவு நங்கையே! என் கவலையெல்லாம் உன் கல்யாணத்தைப் பற்றித்தான் — ஏன் முகம் வெளுக்கிறது உனக்கு! நேரமாகி விட்டதென்றா? சோகம் தாங்காமலா? விரகதாபம் மேலிட்டா? இரு. இரு. அதோ வந்துவிட்டான் என் நண்பன். உனக்கேற்ற காதலன். அவனைத் தெரியுமா உனக்கு? காலையெனும் கட்டழகன் அவன்தான். உங்கள் கல்யாணத்தை இப்போதே முடிவு செய்து விடுவோம். கருப்புப் பெண்ணுக்கும் காலைக்கும் கல்யாணமாம்; அதற்குப் பெயர் சரு...க்கலாம்.

அடேடே! எங்கே ஓடுகிறாய்-இரவுத் தோழியே; இளமை மாறா நங்கையே! இரு இரு, காதலனைக் கண்டதும் அவ்வளவு வெட்கமா உனக்கு! சரி சரி, போ!

# கருப்புத் திரை!

"முருக பக்தியால் சீனருக்கு வியாதி குணமாயிற்று!"

"கடவுளை நம்பினோர் கைவிடட்பட்டார்-குன்றக்குடி அடிகளார் உபதேசம்"

"ஆழ்வார் கண்ட ராமன்"— ஓர் அற்புத ஆராய்ச்சி.

என்றெல்லாம் தலைப்பிட்டுக் கொண்டே தங்கள் பத்திரிகைகளை அரசியல் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்ளும் 'அரசியல் டம்பாச்சாரி'களும் தென்னாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆழ்வார்கண்ட ராமனை பிரசுரித்தாலும் சரி, 'அனுமார் கண்ட சீதை'யை பிரசுரித்தாலும் சரி, தெளிந்த அரசியல் வாதிகள் என்று போடுகிற வேடத்திற்கு மதிப்பளித்தாவது அரசியல் விவகாரங்களை தவற விடாமல் பிரசுரிக்கலாமல்லவா! ஒரு முக்யமான சம்பவம்-படித்தவர்கள் ஒரு ஆண்டு காலமாக எதிர்பார்த்திருந்த சம்பவம் தென்னாட்டுப் பத்திரிகைகளால் இருட்டடிக்கப் பட்டுவிட்டது.

மதத்திற்கும், அதைச் சார்ந்த மடமைக்கும் முக்யத்துவம் அளித்து சென்ற பிப்ரவரியில் கங்கைக் கரையை கொலைக் களமாக்கிய கும்பமேளா பற்றிய செய்தியொன்று தமிழ் தினசரிகளால் மறைக்கப்பட்டுவிட்டது. 'ஐயகோ, அறிவுலகம் சிரிக்கிறதே! அமெரிக்க நாட்டு ஐசனேவரோடு சமமாக இருந்து விருந்துண்ணும் அலகாபாத் பண்டிதரே, உங்கள் கண்ணெதிரே இம்பேர்ப்பட்ட அநாகரீகக் கொண்டாட்டமா? அதற்கு அரை ஆயிரம் பேர் பலியாவதா?" என்று கும்பமேளா கொலை குறித்து நாடெங்கிலுமிருந்து கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன டில்லிமாநகர் நோக்கி! அப்போதுகூட பிரதமர் ஜவகர்லால் நேரு பக்தர்களின் மனம் புண்படக்கூடாதே என்று எண்ணி—அஞ்சி, 'கும்பமேளா கொலை' பற்றிய விசாரணையை நடத்த ஒரு குழுவை அமைத்தார். ஏதோ, மர்மக் கொலை நடந்து விட்டது போலவும், குத்தியவன் மாயமாய் மறைந்து விட்டான் போலவும், எண்ணிக் கொண்டு அந்த விசாரணைக்குழு ஒரு ஆண்டு காலமாக கூடிப்பேசி, அண்மையில் தீர்ப்புக் கூறியிருக்கிறது. பட்டப்பகலில், பலலட்சம் பேர் மத்தியில் பாராளும் மந்திரிகளின் மேல் பார்வையில் நடைபெற்ற பகிரங்கமான வெறியாட்டம் 'கும்பமேளா'! அதற்கு முடிவு காண ஒரு ஆண்டு காலம் தேவையில்லைதான். உலக நாடுகளின் வரலாறு, அவை தற்போது உன்னத நிலையில் இருப்பதற்கான காரணங்கள், இந்தியாவின் பின்னேற்றம், அதற்கு மூலகாரணமான இந்தியாவின் மதச்சடங்குகள்,—இவைகளை வைத்துக் கொண்டு ஆராய்ந்தாலே 'கும்பமேளா'வின் நிர்வாகக் குழுவினருக்கு ஆயுள் தண்டனை தான் விதிக்கத் தோன்றும்.

'கும்பமேளா நிகழ்ச்சி கண்டிக்கத்தக்கது; அரசாங்கம் இதற்கு ஆதரவு அளிப்பது கூடாது. உ. பி. சர்க்கார் சாதுக்களின் நிர்வாண ஊர்வலத்தைத்தடை செய்திருக்க வேண்டும்' என்ற வகையில் கண்டித்து அந்த விசாரணைக்குழு அறிக்கை விடுத்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, சாதாரண நாட்களிலே ஆடை உடுத்தி அழகு பார்த்தவர்கள்கூட விழா அன்று நிர்வாண ஊர்வலத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் திடீர்சாதுக்கள். சாதுக்களுக்கும், இன்னபிற மதச் சடங்குகளுக்கும் இந்திய அரசாங்கம் காட்டுகின்ற சலுகைகளின் பிரதி பலன்தான் கும்பமேளா போன்ற அசம்பாவிதங்கள் நடப்பதற்கு காரணமாக இருக்கின்றன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டில்லி இதழ் 'காரவன்' இந்தச் செய்தியை பிரசுரித்திருக்கிறது. இந்த விசாரணைக் குழுவினர் நாட்டவரின் பாராட்டுக்குறியவர்கள் தான்-பண்டிதருக்கு முரணாகவே தங்களின் உண்மையான கருத்தைத் தெரிவித்துவிட்டார்களல்லவா! அதற்காகவாவது நாம் பாராட்டத்தான் வேண்டும்!

இனி, கும்பமேளா, நடக்குமா? நடத்தினால் அதற்கு எவ்வளவு ஆதரவு இருக்குமென்பதை மக்களே, உணர்த்தி விடுவார்களல்லவா! அதுபோலவே, உண்மை நிகழ்ச்சிகளை இருட்டடிப்பு செய்யும் தேசியப் பத்திரிகைகளுக்கும் நீதிமான்கள் பாடம் கற்பிக்கும் காலம் நெடுந்தொலைவிலிருக்காது என்று கருதுகிறோம்.

## அவர்கள் சொல்லி விட்டார்கள்! நீங்கள் சொல்லுங்கள்!

"நாங்கள் தான் பொதுவுடமை வாதி" என்கிறார்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர். ஆனால் தி. மு. கழகத்தைத் தான் பொதுவுடமைக் கட்சியென்று அமெரிக்கப் பத்திரிகை கூறியது, ரயில் நிறுத்தப் போராட்டத்தின் போது!

★

"சொர்க்கவாசல்" படத்தை வரட்டுக் கற்பனை என்றது தென்னாட்டு பொதுவுடமைக் கட்சி! "சொர்க்கவாசலில்" பொதுவுடமை வாடை வீசுவதாகக்கூறி படத்தையே தடை செய்திருக்கிறது மலேயா சர்க்கார்!

★

பரந்த கண்-ஓட்டக்காரர்களே
இதற்கு பதிலென்ன சொல்லுகிறீர்கள்!

அந்தச்......

5-ம் பக்கத் தொடர்ச்சி

கள்!" என்று அவர்களுக்கே உரித்தான நரிச்சிரிப்போடு கூறினார்கள் அங்கிருந்த பார்ப்பனர்கள். கஜினி செல்வத்தை மட்டும் அபகரித்துக் கொண்டுவரும் எண்ணத்தோடு அங்கு சென்றிருந்தால் மண்டபத்தோடு திரும்பியிருக்கலாம். ஒரே கல்லில் இருகனிகளை வீழ்த்த எண்ணினான் அந்த மாவீரன். பக்கத்தில் நின்ற படைத் தலைவனை கடைக்கண்ணால் பார்த்தான் கஜினி, படைத் தலைவன் தயங்கினான்; காரணம், கடைந்தெடுத்த நாஸ்தீக வாதம் பேசுவோர்கூட கலங்கிடக் கூடிய அளவுக்கு அங்கே ஒரு காட்சி தென்பட்டது. கோயிலிலிருந்த அந்த சிவலிங்கம் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. கஜினியின் முகம் சிவந்தது. தானே, கையில் கடப்பாறையை எடுத்தான். சந்நிதானம் புகுந்தான்.

அந்த மாவீரனைக்கூட தொங்கும் சிவலிங்கம் மிரட்டிடத்தான் செய்தது, ஒருகணம் யோசித்தான்!

"கஜினி, பார்எனது மகிமையை! கற்சிலையென்று இகழ்ந்தாயே என்னை! இப்போது என்ன சொல்கிறாய்"

"கஜினி கலங்காதே! இந்தக்கற் சிலைக்கு பயந்தால் கணக்கில்லா வைரக் கற்கள் கிடைக்காது. உடம் உடை! தகர்த்தெறி!"

இது போன்ற மனப்போராட்டம் நிகழ்ந்தது கஜினியின் இதயத்தில்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து இரு கண்களையும் மூடிக் கொண்டு கையிலிருந்த இரும்புக் கழியால் சிலையைத் தகர்த்தெறிந்தான். சிலை நொறுங்கிச் சுக்கல் நூறாகியது. அப்போதுதான் கஜினி அறிந்தான், சிலை ஒருவித காந்தக் கல்லின் உதவியால் தொங்க விடப்பட்டிருந்ததை! சிரித்தான்! விஞ்ஞானத்தின் தயவால் அஞ்ஞானத்தை பரப்பும் பகல் வேஷக்காரர்களின் செப்படிவித்தையைக் கண்டு இடியெனச் சிரித்தான். அந்தச் சிரிப்பொலி இருளடைந்த மண்டபத்தினின்று எதிரொலித்தது. அவன் கையால் தகர்ந்த கோயிலை எதிர்காலத்தில் இராசேந்திர பிரசாத் ஐந்து லட்ச ரூபாய் செலவு செய்து புதுப்பிப்பார்என்று அன்றே அவன் அறிந்திருந்தால் சோமநாதபுரம் கோயிலை, இருந்த இடம் தெரியாமலே அழித்தொழித்திருப்பான்

★

புல்லுருவிகளால் பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டு தோண்டி எடுக்கப்பட்டகல், ஜர்மன் நாட்டுக்டுக் காந்தக்கல்லின் உதவியால் சோமநாதபுரத்தில் தொங்க விடப்பட்ட சூழ்ச்சி கஜினியால் வெளியாயிற்று.

★


"முரசொலி வழங்கும்"

மூன்று சிறப்பிதழ்கள்!

★

மார்ச் இறுதி வாரம்
அழகிரி நினைவு இதழ்

★★

ஏப்ரல் முதல் வாரம்
முரசொலி ஆண்டு நினைவுப் பேரிதழ்
(விலை எட்டணா)

★★★

ஏப்ரல் மூன்றும் வாரம்
புரட்சிக் கவிஞர் பிறந்த நாள் சிறப்பிதழ்

"வணங்காமுடி"

புத்தம் புதிய கருத்துக்களுடன் மாதம் இருமுறைப் பத்திரிகையாக
1-3—55 தேதி, முதல் இதழ் வெளிவரும்
முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் நாடெங்கும் தேவை.
விபரங்களுக்கு:
'வணங்காமுடி' காரியாலயம், தேவக்கோட்டை.




## குற்றம் புரிந்தவர் நிம்மதி கொள்வதேது

### சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

'நன்ருகப்படி — நல்லெண்ணம் கொள்-நல்லோரோடு பழகு' என்று என் பெற்ருேர்கள் படித்துப் படித்துச் சொன்ஞர்கள். ஆனல் அதை நான் பொருட்படுத்தவேயில்லை. நண்பர்களோடு ஊர் சுற்றினேன்... கடைசியில்... பரீட்சையில் தோற்றேப் போனேன்; இப்போது வருந்துகிறேன்'' — தவறுக்கு வருந்தி ஒரு ஆரூர் தம்பியிருந்து கடிதம் வந்திருக்கிறது.

தவறு செய்யப்படும்போது அங்கு யோசனைக்கு இடமே இருப்பதில்லை. ஆனல், அதன் விளைவு பெரும் பயங்கரமாக—பார்ழும் இருளாகக் கவ்விக்கொள்ளுகிறதல்லவா, அப்போது அந்த மனம் படும்பாடு ... அப்பப்பா! துடிக்கிறது; துவளுகிறது; கத்திக் கதறுகிறது; 'ஓகோ' என்று ஒப்பாரி வைக்கிறது.

அதோ, உற்றுக்கேளுங்கள், அதைப்போலத்தான் ஒரு அழுகுரல்—விக்கி விக்கி அழும் வேதனைக் குரல் எழும்புகிறது! ஐயோ, பாவம், அழுவது யார்? குரல் வரும் திசையைத்தான் நோக்குவோமே. அங்கே ஒரு வண்ண மாளிகை—அதனுள் ஒரு அழகான அறை—உள்ளே ஒரு பட்டு மெத்தை-அதிலே குப்புற விழுந்து கிடக்கிருன் ஒரு தம்பி! அவன் தான் அழுகிருன். விம்மி விம்மி அழுகிருன்! நேரமோ மாலை—விளையாடும் வேளை—அந்த நேரத்தில் சிரித்துக் களிக்க வேண்டிய அந்த சின்னத்தம்பி அழுவானேன்? இந்தக் கேள்விக்குப் பதில்தான் அந்த அழுகை சொல்லும் கதை...

அழகன்—அதுதான் அவனது பெயர்—நல்ல தம்பிதான்—மிகமிக புத்திசாலிதான்—அந்த மாளிகைக்காரருக்கு ஒரே செல்ல மகன் தான். ஆனல்...

சுவையான பாலிலே ஒரு துளி விஷம் கலந்தால் ... பால் இனிக்கவா செய்யும்?

அதைப்போலத்தான் அந்த நல்லதம்பியின் மனதில் ஒரு துளி விஷம் அல்ல; பல துளிவிஷங்கள் கலந்து விட்டனர் அவனுக்குக் கெட்ட நண்பர்களின் தொடர்பு ஏற்பட்டு விட்டது. ஒருவர் இருவர் என்று ஆரம்பித்தார்கள். கடைசியில் அதிகமாகவும் பெருகிவிட்டார்கள். பணக்காரத் தம்பியல்லவா? பசைபோல ஒட்டிக் கொண்டார்கள்.

அப்புறம், அழகனின் நல்ல குணமும் மாறுவதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும்? அழகன் முதலில் பயந்தான்; நடுங்கினன். ஆனல் நண்பர்களின் பாசாங்கு மொழிகள் அவனது பயத்தை துரத்தியது. பாழும் எண்ணத்தை புகுத்தியது. அவனது செயல்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறின. அதன் முடிவு?...

'பொய்' என்பதையே என்னவென்று அறியாத அழகன், அப்பாவிடமும் அம்மாவிடமும் அபாண்டங்களாகப் புளுகினன். புத்தகத்திற்கென்று காசு கேட்பான்; பள்ளிக்கென்று பணம் கேட்பான். அந்தப் பணத்தை கண்டபடி செலவு செய்வான்.

பள்ளிக்கூடம்-அதை விட்டால் வீடு என்று பழகியிருந்த அவன், சில நாட்கள் பள்ளிக்கும் செல்லமாட்டான். நண்பர்களுடன் ஊர் சுற்றுவான்; மரம் ஏறுவான்; மாங்காய் பறிப்பான்; சினிமாவுக்கும் நாடகத்துக்கும் சென்று காசைக் கரைப்பான்; மகிழ்வான். "அகா, அழகனல்லவா நண்பன்?" என்பார்கள் நண்பர்கள். அவ்வளவுதான்; அழகனுக்கு உச்சி குளிர்ந்துவிடும். அன்று எப்படியும் ஐந்து ரூபாய் கொண்டு வந்து விடுவான். மீண்டும் வீடு திரும்பும்போது வெறும் கையோடு செல்வான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள்.

அன்று ஊரிலே புதிதாக ஒரு சினிமா வெளியாகியிருந்தது. அன்றே படத்தைப் பார்த்துவிட வேண்டும்—இப்படி முடிவு செய்தார்கள் அழகனின் நண்பர்கள். அதுதானே அவர்களது வழக்கம்? ஆனல்...அன்று அழகனின் கையிலே பணமில்லை; நண்பர்களும் விடவில்லை; அவனுக்கு என்ன செய்வதென்றும் புரியவில்லை.

வீட்டிற்கு வந்தான். அங்குமிங்கும் நடந்தான். அம்மாவைப் பணம் கேட்கவோ பயம்! அப்பாவைக் கேட்கவும் வழியில்லை; அவரும் வீட்டில் இல்லை. என்ன செய்வது? நடந்து கொண்டிருந்த அழகனின் கண்களில் சுவரில் மாட்டியிருந்த அப்பாவின் சட்டை தெரிந்தது. அவன் மனதில் கண நேரத்தில் ஒரு குருட்டு எண்ணம் தோன்றியது. சட்டையை நோக்கி நடந்தான். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான். சட்டைப் பைக்குள் கையை விட்டான். அவன் கைகள் நடுங்கின; ஆனல் பையில் காலணகூடத் தென்படவில்லை. பதிலாக அப்பாவின் பேனதான் தட்டுப்பட்டது.

அழகன்பேனவைக் 'கப்'பென்று வெளியில் எடுத்தான். அது மிக மிக விலையுயர்ந்த பேன—நூறு ரூபாய் செலவழித்து வரவழைத்த 'பார்க்கர் பேன'. அழகன் அதையெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. பேனவை தன் சட்டைக்குள் மறைத்துக் கொண்டான். விடுவிடு வென்று நடந்தான். வீட்டைவிட்டு வெளியேவந்தான். அவன் உடல் படபடத்தது. 'குப்' பென்று வியர்த்துக் கொட்டியது.

வாசலில் தயாராகக் காத்து நின்ற நண்பர்கள் அவனைச்சூழ்ந்து கொண்டார்கள். கையிலிருந்த பேனவையும் பார்த்து விட்டார்கள். அப்புறமென்ன? திட்டம் தீட்டிவிட்டார்கள். பேனவை யாரிடமாவது விற்பது—சினிமா பார்ப்பது—இதுதான் ஏற்பாடு. அழகன் ஒப்புக் கொண்டான். வேறு வழி? 'ஐயோ, வேண்டமடா அழகா!' என்று கத்தியது மனசாட்சி. ஆனல் சினிமா ஆசை சாமான்யமானதா? சும்மாவிடுமா? அது அந்த நேர்மையான மனசாட்சியுடன் சண்டை போட்டது. வெற்றியும் பெற்றது. அழகன் பொம்மைபோல் நண்பர்களுடன் நடந்தான்.

திட்டப்படி எல்லாம் நடந்தன. நூறு ரூபாய் பேனவை பத்து ரூபாய்க்கு விற்ருன், ஒரு நண்பன். எல்லோரும் பள்ளிக்கூடத்தை மறந்தார்கள். வீரர்களைப்போல சினிமாக் கொட்டகைக்குள் நுழைந்தார்கள்!

★

ஆனல், கொட்டகையை விட்டு வெளியே வந்தபோது...அழகனின் நெஞ்சில் மீண்டும் பயம் தோன்றியது. நண்பர்களும் விட்டுப் பிரிந்தார்கள். அழகன் வீடுநோக்கி மெதுவாக நடந்தான்.

"ஐயோ! அப்பா வந்திருப்பாரே! பேனவைத் தேடியிருப்பாரே! வீட்டில் அடியெடுத்து வைத்தவுடன் கேட்பாரே! என்ன செய்வது?"—என்று எண்ணினன். கால்கள் நடக்க மறுத்தன.

வீடுநெருங்கிக்கொண்டிருந்தது. பயமும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

## சிறிய வயதிலே

### கடிதம் காட்டிய வழி!

அன்புடையீர்,

கடிதத்தைக் கண்டதும் திகைத்து விடாதீர்கள்: 'யாரோ முன்பின் அறிமுகமில்லாதவன்' என்று எண்ணிவிடாதீர்கள். நான் உங்களுக்கு வேண்டியவன். 'நல்ல பையன், மிகமிக நல்ல பையன்' என்று அடிக்கடி பாராட்டுவீர்களே என்னை, நினைத்துப்பாருங்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன் உங்களிடம் கல்வி பயின்ற மாணவன்தான் நான். அன்று அறிவுக்கு வழிதேடி உங்களிடம் பயின்றேன்: இன்ருே...வாழ்வுக்கு வழிதேடி தங்களுக்கு எழுதுகிறேன். ஐயா, நான் இப்போது திசை தெரியாத கப்பல்—வழி தெரியாத சிறுவன். உண்மையைச் சொல்லுகிறேன் — வெட்கத்தை மறந்து எழுதுகிறேன்—நான் சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகின்றன! எனக்கு நீங்கள்தான் வழிகாட்ட வேண்டும்; என்னை மனிதனுக்க வேண்டும். உங்கள் ஆதரவுக் கடிதம் கிடைத்தால் உங்களைத் தேடி வருவேன்; அல்லது உங்களுக்கு பிரியமான சிறுவன் ஒருவன் தற்கொலை செய்துகொண்டான்—என்ற செய்திதான் தங்களுக்கு வரும்"

ஆசிரியர் கடிதத்தைப் படித்தார். மடித்தார். 'பன்னிரெண்டு வயதுவரையே படித்த சிறுவன இப்படி எழுதுகிருன்! அருமையான எழுத்துக்கள்—என் உள்ளத்தைத் தொட்டுவிட்டனவே!' என்று வியந்தார். 'அழகாக கடிதம் எழுதும் இவன், கதை எழுதப் பழகினல் என்ன?' என்று யோசித்தார். உடனே பதில் கடிதம் எழுதினர்.

"தம்பீ! உன் கடிதம் கண்டேன். எழுத்துக்கள் ஒவ்வொன்றும் என்னை பயமுறுத்துகின்றன. தற்கொலையா? அட பைத்தியமே! அதுதான் நற்பண்பா? முன்னேறும் வழியா? என்ன மோசமான முடிவு அது! நான் அழைக்கிறேன், உடனே வா" — என்ற கடிதம் தம்பிக்குப் பறந்தது.

மறுநாள் தம்பி ஆசிரியரிடம் வந்துவிட்டான். அவருக்குத் துணையாளனுகவும் சேர்ந்துவிட்டான். அன்று முதல் ஆசிரியர் அவனது வாழ்வுக்கு வழிகாட்ட ஆரம்பித்தார். எழுதத் தூண்டினர்.

சிறுவன் கதை எழுத ஆரம்பித்தான். புகழையும் தேடி அடைந்தான்.

கடிதம் ஒன்ருல் கதாசிரியனுகிய அந்தச் சிறுவன் யார் தெரியுமா? அவன்தான் ஒரு சட்டிப்பானை வியாபாரியின் மகனுகப் பிறந்து — உலக நாவல் மன்னனுகத் திகழ்ந்த எச். ஜி. வேல்ஸ்!

## பெரிய மனதிலே

## பிறைவானம்...

9-ம் பக்கத் தோடர்ச்சி

"அப்பப்பா! என்ன முட்டாள் தனமான காரியம் செய்து விட்டேன்! 'கண்ணே!' என்று ஆசையுடன் அழைக்கும் அப்பா, 'கள்ளா!' என்று அழைத்தால் ... ஐயோ!"—இப்படி அவன் மனம் என்னென்னவோ எண்ணியது — எப்படி எப்படியோ கலங்கியது, முடிவில் வீட்டையும் அடைந்து விட்டான்.

வீட்டிற்குள் நுழைந்தான். முதல் முதலாக அவனது கண்கள் சட்டை மாட்டியிருந்த இடத்தை கவனித்தன. ஆனால்...அந்த இடம் காலி! சட்டையைக் காணோம்! 'ஐயையோ!...அப்பா வந்து விட்டாரே' என்று திடுக்கிட்டான். மறுகணம் அவன் உடல் வியர்த்தது. நடுங்கியது! அடிமேல் அடி யெடுத்து வைத்தான். பூனைபோல நடந்தான்.

"அழகா!"—அந்த சமயத்தில் இப்படி எழும்பியது அப்பாவின் கோபக்குரல். அவன் திடுக்கிட்டான். அவன் எதிர்பார்த்தது நடந்தே விட்டது. என்ன செய்வது என்றே புரியவில்லை. பேசாமல் நின்றான்.

"அழகா! உன்னைத்தான்...என் அறைக்கு வா!"-அப்பாவின் அதட்டல்குரல் மீண்டும் கேட்டது. அழகன் நடந்தான். இல்லை; இல்லை. காற்றுதான் அவனைத் தள்ளிக் கொண்டு சென்றது. அறைக்குள் சென்றான். அப்பா நின்றுகொண்டிருந்தார். அவனைப் பார்த்தார். பயத்தால் வெளிறிக் கிடந்த முகத்தை உற்றுப் பார்த்தார். பேசினார்:

"அழகா! உண்மையைச்சொல். என் பேனாவை எடுத்தாயா...?"

கேள்வியைக் கேட்டதும் அழகன் திடுக்கிட்டான்; அவன் கால்கல் படபடவென்று நடுங்கின. கண்கள் கலங்கின. அதையும் கவனித்தார் அப்பா. "எடுத்தாயா... சொல்?" என்று கேட்டார். "எங்கே பேனா?" மீண்டும் அதட்டினார்,

அழகன் தடுமாறினான்; தத்தளித்தான். "பேனாவை...ஆமாம்... பேனாவை...நான் எடுக்கவில்லை— இல்லை...இல்லை. எடுத்தேன்..." என்று உளறினான். 'ஐயோ! அப்பாவுக்கு உண்மை தெரிந்துவிட்டது. இனி தப்ப முடியாது. அடியும் உதையும், அதைவிட அவமானமும் என்னை வதைக்கப் போகிறதே!' என்று முடிவுகட்டி விட்டான். அவன் உதடுகள் நடுங்கின.

ஆனால்...

எதிர்பாத்தது நடக்கவில்லை. அப்பா தனது மேஜை டிராயரைத் திறந்தார். எதையோ எடுத்தார், அழகன் அதை கவனித்தான். மறுகணம் 'ஆ...' என்று ஆச்சரியத்தால் கூவினான். அவன் கண்கள் இருண்டன. உலகம் சுழல்வது போல மயங்கினான். ஏன் தெரியுமா? அப்பாவின் கையிலே இருந்தது அவன் திருடி விற்ற பார்க்கர் பேனாதான்!

அவனது நடுக்கத்தினைக் கண்ட அப்பா, "ஏன் பயப்படுகிறாய்?... பார்த்தாயா பேனாவை...? இது என்னிடம் எப்படி வந்தது?...பையில் பேனாவைவைத்திருந்தால் பத்திரம் வேண்டாமா? எவனோ உன் பையிலிருந்து திருடி என் நண்பர் ஒருவரிடம் விற்றிருக்கிறான். நான் அவரை சந்தித்தேன். உண்மையைச் சொல்லி வாங்கி வந்தேன்., சரி..சரி இனிமேலாவது கவனமாயிரு...இந்தா பேனா..."என்று நீட்டினார். அழகன் வாங்கிக் கொண்டான். அப்பா 'டக்' என்று அறையைவிட்டு வெளியே சென்றார்.

அதே சமயம், அழகனின் படபடப்பு குறைந்தது; பயம் மறைந்தது; நடுக்கம் ஓடி ஒளிந்தது; ஆனால்... 'குபீர்' என்று பொங்கிவந்தது அழுகை! அழுகையை அடக்க முயன்றான். ஆனால்... முடியவேயில்லை. அழகன் நிற்கவும் சக்தி இழந்தான். படுக்கையில் சாய்ந்தான். அழுதான். அழுது கொண்டேயிருந்தான்! இதுதான் அழகனின் கதை!

அழகன் இன்னும் அழுதுகொண்டுதான் இருக்கிறான். ஆனால்... அதே சமயம் அப்பாவும், அம்மாவும் அடுப்பங்கரையில் என்னவோ பேசிக்கொள்கிறார்களே!

"ஏன்? குழந்தை ஏன் அழுகிறான்? அவனை என்ன செய்தீர்கள்?" என்று கோபமுடன்-பாசத்துடன் கேட்கிறாள் அம்மா.

"நான் ஒன்றும் செய்யவில்லையே! அவனேதான் செய்தான்! அதுவும் பெரிய தவறு செய்தான்! அதற்குத் தண்டனைவேண்டாமா? அதைத்தான் அனுபவிக்கிறான்..." என்று சொன்னார். சிரித்துக் கொண்டே சென்றார்.

ஆனால், "நான் சந்தேகப்பட்டது சரிதான்! அழகன் கொடுத்துத்தான் அந்தச் சிறுவன் என்னிடமே என் பேனாவை விற்றிருக்கிறான்... நல்லவேளை! நன்றாக சோதித்தேன் ... நல்ல முறையில் பாடம் கற்பித்தேன்! இனி அழகன் திருந்திவிடுவான்..." என்று எண்ணி மகிழ்கிறது அவரது மனம்!

— சொர்ணம்

## இணைந்து......

2-ம் பக்கத் தோடர்ச்சி

தல்ல; தற்காப்புக்காக உண்டாக்கப்பட்ட வேலி—அரண்! அவ்வளவுதான். அச்சம் ஒழிந்தால் அரண் அவசியமில்லை—வேலியும் வேண்டியதில்லை—பார்ப்பனியம் ஒழிந்தால் பார்ப்பனரல்லாதாரீயமும் தானாகச் செத்துவிடும். ஆனால் பார்ப்பனியமும் ஒருவேளை ஒழிந்து, அதன்பயனாய் பார்ப்பனரல்லாதாரீயமும் ஒழிந்து விட்டால், ஏக இந்தியா தத்துவம் தென்னாட்டில் புத்துயிர்பெற்றுவிடும் என தயவுசெய்து அவசரமுடிவு கட்டிவிடாதீர்கள். வடபுலத்து வல்லவரே. 'திராவிடநாடு திராவிடருக்கே' என்பதுதான் தென்னாட்டு மக்களின் இலட்சியம்! என்றும் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் இணைந்து வாழ்வார்கள்; சுரண்டல், குள்ளநரிவேலை, கள்ளத்தனம் இவைகட்கு இடமிருக்காது.

தோழரே, என்னால் முடிந்த கூடுமான வரையில் உங்கள் மனம் புண்படா வகையில் எழுதியிருக்கிறேன். இதுபற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ?

அன்புள்ள,

பொன்முடி.



# போலீஸ் வழக்கு பொடியாகிறது !

# பம்பாயில் சுவையான நிகழ்ச்சி !

கேள்வி:— காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் அலகாபாத்தில் விபச்சார விடுதி ஒன்றில் காணப்பட்டாராமே?

பதில்:— இதில் என்ன தவறு? ஒரே ஒரு காங்கிரஸ் காரராவது இன்னும் ஆண்மை இழக்காமல் இருக்கிறாரே—என்பதற்காக நான் மகிழ்கிறேன். நம்முடைய காங்கிரஸ் சட்டசபை மெம்பர்களுக்கு இன்னும் ஆண்மை அளிப்பதில், பொதுமக்களும், பத்திரிகைகளும் தோல்விகண்டதைப் போல் அல்லாமல், விபச்சாரிகளாவது வெற்றி பெறட்டும்.

—இப்படி ஒரு கேள்வி-பதில் பாபுராவ் பட்டேலை ஆசிரியராகக் கொண்ட 'பிலிம் இந்தியா'வில் வெளியாகி இருந்தது. இதுபோன்ற கேள்விகளுக்காகவும், இன்னும் சில கார்ட்டூன்களுக்காகவும் பம்பாய் போலீசார் அவர்மீது, பத்தாயிரம் ரூபாய் ஜாமீன் தொகை கட்டும்படி வழக்கு தொடுத்திருந்தார்கள்.

## 'ஸ்டாலின் தப்பித்தார்"

ராஜ்குமாரி அமிர்தகௌரி ரஷ்யா சென்றிருந்தபோது, 'பிலிம் இந்தியா'வில் ஒரு கார்ட்டூன் வெளிவந்தது. இந்திய உபகண்டத்து சுகாதார அமைச்சரைப் பார்த்து ரஷ்யர்கள் தலைதெறிக்க ஓடுகிறார்கள். 'ஓடாதீர்கள் — நான் ஒரு கன்னிப் பெண்தான்!"—என்று அமிர்தகௌரி கத்துவதாகவும் படம் போடப்பட்டிருந்தது. இது, இரண்டு அர்த்தம் கொண்டிருப்பதாகவும், 'மிகவும் அசிங்கமாக' இருப்பதாகவும் போலீஸ் தரப்பில் புகார் செய்யப் பட்டது. இதற்கு, நீதிபதி ஷீலட் மேல்நாட்டு உயர்நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி கீழ்கண்ட முடிவு கூறியிருக்கிறார்:

"ஒரு கொள்கையையோ, அல்லது எண்ணத்தையோ கார்ட்டூன் வடிவில்—மிகைப்படுத்திக் கூறுவது எல்லோராலும் அனுமதிக்கப்பட்ட முறையாகும். வரம்பைத் தாண்டாமல், துடிப்போடும், தீவிரத்தோடும் ஓவியர் கார்ட்டூனில் கருத்தைத் தெரிவிக்கும் முறையை சட்டம் தடுப்பது கிடையாது...சொல்ல வேண்டிய கருத்துக்கு தேவையற்ற அம்சங்களோ—அல்லது புகழுக்கு இழுக்கு சேர்ப்பதாக நினைக்கப்படும் அம்சங்களோ 'அசிங்கமானதாக'க் கருதப்படக் கூடாது...

"(போலீசார்)இந்த கார்ட்டூனுக்கு இரண்டு அர்த்தம் இருப்பதாக வாதிடுகின்றனர். சாதாரண நோக்குக்கு ஒரு அர்த்தமும், ஆழ்ந்த நோக்குக்கு பிரிதொரு தவறான அர்த்தமும் இருந்தால், தவறான அர்த்தத்தையே முன்வைத்து அதற்கு அந்த ஆசிரியரை பொறுப்பேற்கச் செய்ய முடியுமா? எழுத்தாளருக்கோ--கார்ட்டூன் வரைபவருக்கோ தன்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்ல தடை கிடையாது...பத்திரிகையின் உரிமைகளை சட்டம் பறித்துச் செல்லக் கூடாது. ஒரு கட்டுரைக்கோ, அல்லது கார்ட்டூனுக்கோ இரண்டு அர்த்தங்கள் இருந்தால், நான் சரியான அர்த்தத்தைத் தள்ளிவிட்டு, தவறான அர்த்தத்தையே, மனதில் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது!"

## 'மூன்றாவது பால்'

இதோடு முடிந்து விடவில்லை நீதிபதியின் பொன்னுரைகள். "மூன்றாவது பால்"—என்னும் தலைப்பில் வெளிவந்த 'கார்ட்டூன்களை'யும் போலீசார் 'அசிங்கமான'தென்று ஆட்சேபித்திருந்தார்கள்.

"சரித்திரத்து அலிகள்" என்னும் கட்டுரையின் ஒரு பகுதிதான், அந்த கேலிச்சித்திரம். அந்தப் படத்தில் ஒரு மூலையில் ஐசன்ஹோவர் நிற்பது போலவும், மற்றொரு மூலையில் மாலங்கோவ் நிற்பது போலவும், இடையே அலி வேஷத்தில் நேரு நிற்பது போலவும், வரையப்பட்டிருந்தது. 'ஆணுமல்ல; பெண்ணுமல்ல! இது என்ன ஜக்?"...என்று மாலெங்கோவ் வினவுகிறார். "இது மூன்றாவது பால்?"—என்று (ஜக்) பதில் சொல்கிறார். படத்தின் கீழே, "(சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு) தன்னுடைய நடுநிலைமைக் கொள்கை கொண்ட (ரஷ்ய, அமெரிக்கக் கூடாரமல்லாத) மூன்றாவது கூடாரத்தை ஆசியாவில் நிலை நாட்ட நேரு முயற்சிக்கிறார்"—என்று எழுதியிருந்தது. அதைப் போலவே, அலிவேஷத்தில் இருக்கும் நேருவும்,நடுநிலைமைக்கொள்கையை உருதுப் பாட்டாகப் பாடிக் கொண்டு, "சோவனம்" கொட்டுவதாகவும் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. படத்தின் ஒரு ஓரத்தில், கையிலே ஒரு பீரங்கியுடன் பாகிஸ்தான் பிரதமர் முகமதலி, ஐசன்ஹோவரைப் பார்த்து, படத்திலிருக்கும் அலியைக்காட்டி, "எனக்கு அந்த ஆள் வேண்டும்; முஸ்லீம்கள் (அதைப்பற்றி) கவலைப்படுவதில்லை, தெரியுமா?"—என்று கேட்பது போலவும் எழுதப் பட்டிருந்தது. இந்தப் படத்தைத்தான் போலீசார் ஆட்சேபித்திருந்தார்கள்.

ஆசியாவின் ஜோதியை 'அலி'யாக உருவகப்படுத்துவதா?—என்று தேசிய பக்தர்கள் சீறலாம். நாடு போற்றுபவராயிற்றே; உலகத் தலைவர்களின் நெஞ்சில் நிறைந்தவரல்லா அவர், அத்தகைய பெரிய மனிதரையா இப்படி கேலி செய்வது—என்று இரக்க உள்ளம் கொண்டோர் மனம்நோகலாம்; அவசரப்படாதீர்கள்— இதோ; தீர்ப்பின் ஒரு பகுதி :

" 'நடு நிலைமை' என்னும் கொள்கைதான் இங்கு உருவகப்படுத்தப்பட்டிருக்கிறதேயன்றி, எந்தவித நபரும் தனிப்பட்ட முறையில் இதில் சம்மந்தப்படவில்லை.........அலிகளைப் பற்றிச் சொல்லப்போனால், மொகலாய சாம்ராஜ்யத்தில் அவர்களுக்கு உயர்ந்த பதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன...மொகலாயப் பெண்மணிகளுக்கு அவர்கள் காவல் புரிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் காம இச்சையைத் தீர்க்க பயன்படுத்தப்பட்டதாக எதிலும் சொல்லப்படவில்லை. "ஸ்டாலின் தப்பித்தார்"என்ற கார்ட்டூனுக்குச் சொன்னதைப் போல, சிலர் இந்தக் கேலிச்சித்திரம் தேவையற்றது என்று சொல்லலாம்; தாக்கும் மனப்பான்மை கொண்டது என்று கூட கருதலாம். அது அந்தந்த வாசகர்களின் மனப்பான்மையைப் பொறுத்தது. அதற்காக ஆபாசமென்றோ, அசிங்கமானதென்றோ இதைச் சொல்லிவிட முடியாது...

"ஜனநாயக நாடுகளில் அரசியல் தலைவர்கள் கட்டுரைகளிலும், கார்ட்டூன்களிலும் விமர்சிக்கப் படுவது இயற்கை. "திராவிட நாடு" சென்னை உயர்நீதி மன்ற 'புல்பெஞ்ச்' தீர்ப்பு, வழக்கு மன்றங்கள் இதுபோன்ற கட்டுரைகளை எப்படி பரிசீலிக்க வேண்டுமென்று எடுத்துக் காட்டியிருக்கிறது...தனிப்பட்ட வாசகங்களையோ, வார்த்தைகளையோ எடுத்துக் கொள்ளாமல், அந்த முழுக் கட்டுரையையும் பாரபட்சமற்ற, நேர்மை உள்ளத்தோடு நோக்க வேண்டும்..."

நீதிபதி ஷீலட்டின் நேர்மைப் பண்பால் "பிலிம்இந்தியா" தப்பித்தது; சட்டமென்னும் வெறிநாயைக் கட்டவிழ்த்து விடக்காத்து நின்ற போலீசார் தோற்றனர்!

சாக்கடையிலே தூரிகையை துவைத்து எழுதும் சைத்ரிகர்களே! தனிப்பட்டவர்களையல்ல; அவர்கள் சார்ந்திருக்கும் கொள்கைகளை வேண்டுமானால், முடிந்தால், கேலிச்சித்திரம் மூலம் விமர்சனம் செய்யுங்கள்—என்று மறைமுகமாக இடித்துக்கூறும் பம்பாய் நீதிபதியின் வார்த்தைகளைக் கவனியுங்கள்! இனியாவது கயமைத்தன்மைக்கு விடை அளியுங்கள்!

✶

### கொசுக்கடி !

"ஜனக் கணக்கின்படி ஆண்களிலும் பெண்களிலும் படித்தவர்கள் அதிகமாக தென்னாட்டில்தான் இருக்கின்றனர் என்பது புலனாகிறது. மற்றும் இதே ஜனக் கணக்கு தொழில் புள்ளி விவரங்களிலிருந்து இந்தத் தென்னாட்டு மக்கள்தான் பிழைக்க வழியின்றி அதிகமாக அவதிப்படுகின்றனர் என்பதும் புலனாகிறது"

"தென்னாட்டுக்கு அடிக்கடி செல்லும் இந்த மந்திரிகளிலே-மிக உயர்ந்தவர்கள் உள்பட எத்தனை பேர் தென்னாட்டு மக்களின் உள் மனத்தை அறியக் கவலைக் கொண்டனர்? இந்த கடுமையான குற்றச்சாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து 'ஹிந்தி' வெறும் கொசுக்கடி போன்றதேயாகும்"

—'சிடிசன்'
(கான்பூர் ஆங்கில இதல்)



நண்பர்;- உங்கள் பேப்பர் எல்லாம எப்படிப் போவுது?
ஆசிரியர்: ரயிலிலும் போகுது! தபாலிலும் போகுது!

# கடைசிப்பக்கம்

ஆறுமுகம், பேரம்பூர்
சென்னை. 11

(?) மு. கருணாநிதி தொழிற்சங்கங்கள் வெறும் சோற்றுப் போராட்ட ஸ்தாபனங்கள் என்று சொன்னதாக ஒரு கம்யூனிஸ்டு எழுதியிருக்கிருரே. கருணாநிதி அப்படிச்சொன்னது உண்மைதானு?

இல்லை அவர் அப்படி; சொன்னதாகயாரோ ஒரு "சோற்ருலடித்த பிண்டம்" உளறிக்கொட்டியிருக்கலாம். அவ்வளவுதான்! தொழிற்சங்கங்களிடம் கம்யூனிஸ்டுகள் (சுயலாபத்தைக்கருதி) காட்டி வருகின்ற போலி அக்கரையைப் போல் அல்லாமல் தி. மு. கழகம் உண்மையிலேயே அனுதாபங் காட்டி வருகிறது.

(?) தி. மு. கழகத்தார் குபேரர்கள்; கம்யூனிஸ்டுகள் குசேலர்கள் என்கிறேன் நான்? உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஆமாம் அறிவுச் செல்வத்திலே அப்படித்தான்!!

(?) தி. மு. கழகத்துக்கு சினிமா உலக முதலாளிகள, நடிகர்கள் ஆதரவு இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் அப்படியல்ல என்கிறேன்நான்.

நண்பரே, இந்தக் கேள்வியை ஆந்திராவில் கம்யூனிஸ்டுகளுக்கு தேர்தல் பிரச்சாரம் செய்யும் சென்னை பிரகாஷ் ஸ்டுடியோம் உரிமையாளர் நடிகை ஜி. வரலக்ஷ்மி கேளுங்கள்.

(?) தி. மு. கழக தலைவர்களில்சிலர் சொந்தக்கார் வைத்திருக்கிருர்களே? இருக்கலாமா?

என்ன செய்வது? கம்யூனிஸ்டுகளுக்கு தந்ததுபோல் எங்களுக்கு எந்த மாவூர் சர்மா இரவல் கார் தரப்போகிருர்!

சண்முகம், உறையூர்.

(?) கம்யூனிஸ்டு தோழர் ஜீவானந்தத்திற்கு ஆறுமுகம் என்று ஒரு பெயர் உண்டா?

இதைப்பற்றி அவரையேகேளுங்கள். ஆனால் அவருக்கு பெற்ருேர்கள் இட்ட பெயர் சோனி முத்து என்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆனந்தன்—மாயவரம்

(?) இந்தியக் கம்யூனிஸ்டுகள், கம்யூனிசக் கொள்கை பிடிக்காத காங்கிரஸ் மீது காட்டும் ஆத்திரத்தைவிட முற்போக்குக் கொள்கையுள்ள தி. மு. கழகத்தின் மீதுஅதிக ஆத்திரப்படுவேதேன்?

தி. மு. கழகம் உண்மையான கம்யூனிசத்தைப் பரப்பி வருவதால்!

தமிழன்பன், பிரம்பை

(?) தி. மு. க இதுவரை நாட்டிற்கு செய்த நல்ல காரியங்கள் என்ன?

அது உதயமானதே இந்த நாட்டிற்கு நல்ல காரியங்கள் செய்வதற்குத்தான்!

க. கா. இராசு, மணிமுத்தாறு அணை

(?) நமது நாட்டில் இருப்பது போன்று கட்சிகளின் எண்ணிக்கை மேல் நாடுகளிலும் உண்டா?

உண்டு; உண்டு! ஆனால் அவையெல்லாம், 'போர்! போர்! இங்கே போர்—அங்கே போர்—எல்லைப் போர்'—என்று ஈரமுரசு கொட்டி, 'அக்கப்போர்' செய்யும் கட்சிகளாக இருக்காது!

ஆர். கே மூர்த்தி; ஓடாக்கநல்லூர்.

(?) தலைவனில்லாத கட்சி உருப்படுமா?

தலையில்லாத முண்டம் ஆளாக முடியுமா? மாஜினியைப் போன்று வைரம் பாய்ந்த நெஞ்சும், லெனினைப் போன்று சிந்தனைத் திறனும், ஸ்டாலினைப் போன்று செயலாற்றும் பண்பும் வாய்ந்த தலைவர்கள் ஒரு கட்சியின் கலங்கரை விளக்கம்—கொள்கை பணம் பரப்ப உதவும் கற்பூரப் பெட்டகம்! அப்படி ஒரு நல்ல தலைவனில்லாத கட்சிகள் – உதிரிகளாய், ஊதாரிகளாய் இருந்து, சந்துமுனை சிந்து எழுப்புவதற்குத்தான் பயன்படும்!

இர. கு. பாண்டியன், வீரபாண்டி

(?) இராமாயணத்திலுள்ள ஆபாசங்களைக் எடுத்துக் கூறுவது; ஒரு வீட்டில் தாழ்வாரம் மாடி முதலியவைகள இருக்கும் போதுஒருமனிதன் 'கக்கூசில்' உட்கார்ந்து சொண்டு பேசுவது போல் இருக்கிறது-என்று ஒரு பிரமுகர் கூறுகிருர். தங்கள் கருத்தென்ன?

'கக்கூசில்' உட்கார்ந்து பேசினுல்கூட பரவாயில்லை, தோழரே. நீங்கள் சொல்லும் 'பிரமுகர்கள்' சங்க இலக்கியங்கள் பல இருக்கும் போது இராமாயணத்தைப் போற்றுவது, கனிவகைகள் இருக்க, நான்மாடக் கூடங்கள் இருக்க, கக்கூசில் உட்கார்ந்து சாப்பிடுவது போல் அல்லவா இருக்கிறது! இந்த ஆபாசத்தை அறிவுத் துறையிலே 'சுகாதார சேவை' செய்துவரும் நாம் எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

செல்வன், திங்கள் சந்தை.

(?) சீன நாட்டுக் கலைவாணர்களும், இந்தியக் கலைவாணர்களும் உறவாடினுல் சம்யூனஸ்ட்டுகள் கூறியதுபோல பசி பட்டினி ஒழிந்து விடுமோ?

சரியான கேள்வி! இதை 'அரசியல் செவிடர்களுக்கு' உரத்த குரலில் எடுத்துச் சொல்லுங்கள்!

எஸ். லீலாவதி; அவிசாவெல்ல;
சிலோன்

(?) பெண்களின் அழகைப்பற்றி விதவிதமாக வர்ணிக்கும் எழுத்தாளர்கள் ஆண்களின் வீரத்தையும், விவேகத்தையும் வர்ணித்து விட்டு, அவர்களது அழகை மட்டும் ஏன் வர்ணிப்பதில்லை?

வீங்கிய தோளும், வேங்கை நெஞ்சும் மட்டுமல்ல — வீரமும், விவேகமும்தான் ஆண்களுக்கு அழகு தருவது! அதுமட்டுமல்ல; கனல் சொரியும் கதிரவனை எந்தப் புலவராவது வர்ணிக்கிருர்களா? குளிர் நிலவைப் பற்றி விவரித்தால் தான் இந்தப் பொல்லாத உலகம் ஏற்றுக் கொள்வேன் என்கிறது!

கோமேதகவேல், திருநெல்வேலி.

(?) டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்ற வேண்டிய அவசியமென்ன?

பீட்டர்ஸ்பர்க்கை லெனின் கிராடாக மாற்றுவதற்கு இருந்தஅவசியத்தை விட இதில் அதிக அவசியமிருக்கிறது,

★

## கொள்கை விளக்க கோபுரம் போலே!

**சென்னை-அரும்பாக்கம்**
**26—2—55**

பேசுபவர்:
சி. பி. சிற்றரசு
எஸ். எஸ். தென்னரசு
மீ. இராமலிங்கம்

★

**கட்டிமேடு**
**27—2—55**

பேசுவோர்;
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ந. தர்மலிங்கம்
மு. அ. செங்குட்டுவன்.

★

**தி. மு. க. 43வது வட்டம்**
மீர்சாகிப்பேட்டை
**1—3—55**

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கே. எம். கண்ணபிரான்
ஏ. கே. வில்வம்

★

## பிறப்பு

★

பண்ணைக்காடு 'பாண்டியனர் நினைவு மன்ற' செயலாளர் என். எஸ். ஏ. நெடுஞ்செழியன் அவர்களின் துணைவியார் மூக்கம்மாள் 7—2—55 அன்று ஓர் ஆண்மகவுக்கு தாயானுர். குழந்தைக்குப் பன்னீர் செல்வம் எனப் பெயரிடப்பட்டது,

★

நமது அரகண்ட நல்லூர் விற்பனையாளர் சம்மந்தன் அவர்களின் துணைவியார் ருக்மணி அம்மையார் அவர்கள் சென்றகிழமை ஒரு ஆண்மகவுக்குத் தாயானுர்கள்.

## 'முரசொலி'

சந்தா விபரம்

**உள்நாடு-இலங்கை**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மூன்று மாத சந்தா கிடையாது.


உல்லாசப் புத்தகம்! உணர்ச்சிகளின் பெட்டகம்!
இலவு காத்த ஏந்திழை நால்வரின் இதயக் கலக்கம்!
அதிலே
இரட்டைப் பின்னல்காரியின் வெற்றி முழக்கம்!
"பாசுமணி"
[தரும்]
★ பஞ்ச பாவையர் ★
திருமணப் பரிசுக் கேற்ற தீந்தமிழ் ஏடு!
விலை 1-8-0 மூவர்ண முகப்பு கழிவு 30%
:- தேவைக்கு :-
பாபு பதிப்பகம், 25, வெங்கய்யர் தெரு, சென்னை-1



Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.